விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 18 வியாழக்கிழமை (04.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320

## இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி உண்மையை மூடி மறைக்க அரசாங்கம் சதி

### கோட்டா அரசாங்கம் மீது ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி உண்மையான பிரச்சினைகளை மூடி மறைக்கும் அரசாங்கத்தின் சதி அரசியலுக்கு மக்கள் இரையாகிவிடக்கூடாது என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்



அனைவருக்கும்
இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

- வலம்புரிக் குடும்பம்

### மன்னாரில் 17 வயது மாணவன் கஞ்சாவுடன் கைது



(மன்னார்)

மன்னாரில் ஒரு தொகுதி கேரள கஞ்சா 19

### யாழ். - கொழும்பு ரயில் சேவைகள் இன்றுமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். காங்கேசன்துறை - கொழும்பு - கல்கிசை இடையிலான தொடருந்து சேவைகள் இன்றுமுதல் ஆரம்பமாகும் என்று யாழ்ப்பாணம் ரயில்நிலைய தலைமை 19

## டொலர்கள் உள்நாட்டில் அச்சிடப்படுவதில்லை

# விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாது

### வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன



(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாது என தெரிவித்துள்ள வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன டொலர்கள் உள்நாட்டில் அச்சிடப்படுவதில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் பல்வேறு இடங்களில் அரசுக்கு எதிராக போராட்டங்கள்

(கொழும்பு)

நாட்டில் பல்வேறு இடங்களிலும் நேற்று தொழிற் சங்கப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

யுகதனவி மின்சார நிலையத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கியமைக்கு எதிர்ப்பு வெளியிட்டு மின்சாரசபை பணியாளர்கள், கொழும்பில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.



19

### மண்டைதீவில் மினி சூறாவளி
## கண்ணகை அம்மன் ஆலய மண்டபங்கள் பலத்த சேதம்

(மண்டைதீவு)

மண்டைதீவு கிழக்குக் கடலோரமாக திடீரென வீசிய மினி சூறாவளியால் மண்டைதீவு பூம்புகார் கண்ணகை அம்மன் ஆலயத்தின் கூரைகளும் அன்னதான மண்டபமும் பலத்த



19

## யாழில் சேதன பசளை இராணுவத்தால் உருவாக்கம்

### விவசாயிகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நச்சுத் தன்மையற்ற இயற்கை வழியில் இராணுவத்தினரால் உருவாக்கப்பட்ட சேதன பசளை உற்பத்திகள் யாழ். மாவ



19

## தீபாவளி பண்டிகை கொண்டாட்டம்; கொரோனா கொத்தணி அபாயம்

(கொழும்பு)

நாடுமுழுவதும் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படும் நிலையில் புதிய கொரோனா கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கிடையிலான பயணத் தடை நீக்கப்பட்டுள்ளதால் வெளிமாவட்டங்களுக்கு தொழிலுக்கு



19

## 316 ஏக்கர் காணிகள் முகமாலையில் விடுவிப்பு

(முகமாலை)

முகமாலை கிராம சேவையாளர் பிரிவில் 316 ஏக்கர் காணிகள் நேற்று உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சர் இந்திக்க அநுருத்த ஆகியோரினால் இந்தக் காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதன்படி, பச்சிலை 19

## கொரோனா 21 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 21 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளது. மேலும்மொத்த 19

### தீபாவளியை முன்னிட்டு
## வடக்கு பாடசாலைகளுக்கு நாளை சிறப்பு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு நாளை வெள்ளிக்கிழமை சிறப்பு விடுமுறை வழங்க மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு இதுதொடர்பான அறிவுறுத்தலை அவர் நேற்று வழங்கியுள்ளார்.

இன்று வியாழக்கிழமை இந்துக்களின் 19

# கிளிநொச்சியில் கஞ்சா கடத்திய இருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வான் ஒன்றில் மறைத்து எடுத்த செல்லப்பட்ட கஞ்சா மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்றுள்ளது. கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியிலிருந்து மட்டக்களப்பிற்கு வான் ஒன்றில் சூட்சுமமாக மறைத்து எடுத்து செல்லப்பட்ட நிலையில் பொலிஸாரால் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது 10 கிலோ 845 கிராம் எடையுள்ள கஞ்சா மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை குறித்த வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ம-100)

# யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த பாதுகாப்பு பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவருக்கு நேற்றைய தினம் புதிய வீடு ஒன்றுக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

இவர் அண்மையிலேயே ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இவரது பெற்றோர் உயிரிழந்துள்ளதுடன் இவர் தற்போது சகோதரியுடன் வசித்து வருகின்ற நிலையில் இராணுவத்தினரிடம் உதவியினை கோரிய நிலையில் இந்த வீட்டுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அதேவேளை குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற குடும்பம் ஒன்றுக்காக உடுவில் பகுதியில் இராணுவத்தினரால் கட்டப்பட்ட புதிய இல்லம் ஒன்றும் பயனாளிகளிடம் இராணுவத் தளபதியினால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாதுகாப்புப் படை கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடிதுவக்கு உட்பட இராணுவ அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ம-18,33)

# ஆலயத்திற்கு சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் ஆலயத்திற்கு வழிபடச் சென்ற பெண் ஒருவரிடம் சங்கிலியை அறுத்துக் கொண்டு இருவர் தப்பிச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் உள்ள சிவன் ஆலயத்தில் வழிபாடு மேற்கொள்வதற்காக பெண் ஒருவர் சென்றுள்ளார். இதன்போது ஒரு மோட்டர் சைக்கிளில் வந்த இருவர் அந்தப் பெண்ணை ஆலயம் அருகில் வழிமறித்து ஒருவரிடைய பெயரைக் கூறி ஆலயத்தில் குறித்த நபர் உள்ளரா? எனக் கேள்வி எழுப்பிய போது, அவர் பதில் அளிக்க முற்படுகையில் அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு குறித்த இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த பெண் அணிந்திருந்த மூன்று பவுண் தங்கச் சங்கிலியே இதன்போது அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வவுனியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து வவுனியா பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெத்துள்ளனர். (ம-250)

# யாழ். இந்தியத் துணைத் தூதுவருடன் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா சந்திப்பு

## அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது இந்தியாவினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், ஒத்துழைப்புத் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக கல்வி, சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பம், விவசாய உற்பத்திகள், சுகாதாரம் மற்றும் வீடமைப்புத் துறை என்பன தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ம-18,33)

# பூஸா சிறைச்சாலையில் 10 கைதிகளுக்கு கொரோனா

(கொழும்பு)

காலி பூஸா சிறைச்சாலையில் மேலும் 10 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் நேற்று தெரிவித்துள்ளது.

குறித்த சிறைச்சாலையில் 42 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே 10 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)


# மரண அறிவித்தல்

## திருமதி பறுவதம் சுப்பிரமணியம்



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சம்பியன் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பறுவதம் சுப்பிரமணியம் நேற்று (03.11.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் பொன்னையா சுப்பிரமணியத்தின் (கொழும்பு) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் நல்லதம்பி (பாணந்துறை) மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் தேவமலர் (இளைப்பாறிய ஆசிரியை), உதயசங்கர் (கனடா), திலகமலர் (கனடா), மோகனமலர் (கனடா) மற்றும் காலஞ்சென்ற பவமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரேமகுமார் (மரணவிசாரணை அதிகாரி - யாழ். போதனா வைத்தியசாலை), சுதாயினி (கனடா), ஜெயக்குமார் (கனடா), அருட்செல்வன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வரதராஜா, திருமேனிப்பிள்ளை (கனடா), பங்கயச்செல்வி (கனடா), செல்வராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லோகபிரசாத் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), பிரவீனா (ஆசிரியை - யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்), யதுர்ஷன் (மருத்துவபீட மாணவன் - சீனா), அஸ்வின் (கனடா), நிவேதா (கனடா), அபிஷா (கனடா), அர்ஷயா (கனடா), லதிகா (கனடா), கிஷோர் (கனடா), யாதவன் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), வனஜா (ஆசிரியை), ஜபேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தனுஸ்ரீ அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொக்குவில் சம்பியன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (04.11.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(8490)

சம்பியன் வீதி,
கொக்குவில்.

தகவல் :-
நமசிவாயம் பிரேமகுமார் (மருமகன்)



## பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை.
வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை. வேலை நேரம் காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை.

(8484)

074 049 0003



## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 . 11 . 1952



மறைவு
03 . 11 . 2015

அமரர் திருமதி
செல்வராசா விஜயமலர் (மலர்)

திதி : அபரபக்க அட்டமி

ஆறாண்டு மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
ஆண்டாண்டு ஆனாலும்
நீங்காது உம் நினைவலைகள்...

(8485)

இல. 57 பிரம்பபடி லேன், கொக்குவில். குடும்பத்தினர்

# கட்டுப்பாடுகள் தளர்வால் கொரோனா அதிகரிப்பு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(கொழும்பு)

**பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதால், கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதாகப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**



குறிப்பாகப் பொதுப் போக்குவரத்து மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் போது சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் எனவும் ஒன்று கூடல்கள், நிறுவனங்களில் நடைபெறும் கூட்டங்கள் போன்றவற்றை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். ( நி-5)


# பாராட்டி வாழ்த்துகிறோம்

Congratulations

செல்வி.

சதீஸ்

யானுஜா



இல.13/4 கனகபுரம் கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட சதீஸ் நிமாலினி தம்பதியரின் கனிஷ்ட புத்திரி யானுஜா அவர்கள் 2020 ஆம் ஆண்டு க.பொ.த.(சா.த) பரீட்சைக்குத் தோற்றி 9 பாடங்களிலும் A சித்தியைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இதையிட்டு கனகபுரம் கிராமமே பெருமையடைகிறது.

அவரின் சிறந்த பெறுபேற்றுக்கு உறுதுணை வழங்கிய குடும்பத்தினர் கல்வி கற்ற பாடசாலையாகிய கிளிநொச்சி ம.வி. அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் அவர்களுக்கும் வகுப்பாசிரியர், ஏனைய பாட ஆசிரியர்கள், கல்விகற்ற தனியார் கல்வி நிலையமான றோயல் கல்வி நிலைய நிர்வாகி திரு.ச.குமார் மற்றும் ஆசிரியர்களுக்கும், கனகபுரம் மக்கள் சார்பாகவும், கனகபுரம் முதியோர் சங்கம் சார்பாகவும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். செல்வி.ச.யானுஜா அவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்று சாதனை படைக்க ஆண்டவன் அருள் கிடைக்க வேண்டி நிற்கின்றோம். கனகபுரம் கிராமத்தில் இருந்து 2020 ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றிய ஏனைய மாணவ, மாணவிகளையும் வாழ்த்துகின்றோம்.

(8480)

முதியோர் சங்கம், கனகபுரம், கிளிநொச்சி.


# ஒரே நாடு; ஒரே சட்டம் செயலணி மூலம் தமிழ் சமூகத்தை ஜனாதிபதி அவமதித்துள்ளார்

## ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

'ஒரே நாடு ஒரே சட்டம்" தொடர்பான சட்டங்களை இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மட்டுமே இருக்கிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சிறிகொத்தவில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் பேசிய அவர், ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கருத்தை நடைமுறைப் படுத்தும் பொறுப்பு ஜனாதிபதி செயலணிக்கு இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

முஸ்லிம் சமூகத்தையும் நீதித்துறையையும் பகைத்துக் கொண்டது மட்டுமல்லாமல் ஒரு தமிழரைக்கூட குறித்த செயலணியில் நியமிக்காமல் அந்த சமூகத்தை ஜனாதிபதி அவமதித்துள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் உண்மையான தலைவர் அனைத்து சமூகங்களையும் ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைப்பார் என குறிப்பிட்ட ருவான் விஜேவர்தன, இந்த நெருக்கடி காலத்தில் அனைவரும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (நி)

# முதுகலைப்பட்டம் பெற்ற வேலணை மூதாட்டி



(ஒட்டாவா)

கனடா யோர்க் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற 4 ஆயிரம் இளமைப்பருவ மாணவர்களில் யாழ்ப்பாணத்தின் வேலணையைச் சேர்ந்த 87 வயதான திருமதி.வரலட்சுமி சண்முகநாதன் முதுகலைப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.

இப்பல்கலைக்கழகத்தின் முதுகலைப்பட்டம்பெற்றமிகவயதான நபர் என்ற பெருமையை இவர் பெற்றார். (நி-5)

# வெள்ளைக் கொடி விவகாரம் அரச தரப்பிற்கு அறிவிக்கப்பட்டது

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

போரின் இறுதி நாட்களில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள் இலங்கைப் படைகளிடம் சரணடைய விரும்பும் விடயத்தை தன்னிடம் தெரிவித்ததாகவும், அதனை தாமே பசில் ராஜபக்ஷவிடம் தெரிவித்ததாகவும் இலங்கைக்கான முன்னாள் சமாதானத்தூதரும், நோர்வேயின் சர்வதேச மேம்பாட்டு அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

போரின் இறுதிக் கட்டத்தில் உண்மையில் என்ன நடந்தது? போரின் இறுதி நாட்களில் விடுதலைப் புலிகள் எவ்வாறு உலகுடன் தொடர்பு கொண்டார்கள் போன்ற வினாக்களுக்கு பதில் வழங்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் பதில் வழங்கிய அவர்,

**"என்னிடம் விசேடமான தகவல்கள் எதுவும் இல்லை.**



போரின் கடைசி நாட்களில், வட கிழக்கில் ஒரு சிறிய பகுதியில் விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர்.

2009 மே 17 அன்று - வெள்ளைக்கொடிசம்பவத்திற்கு முன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத் தலைவர் புலித்தேவன் எங்களுக்கு அழைப்பு விடுத்து அவரும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் நடேசனும் சரணடைய விரும்புவதாகவும் **இவ்விடயத்தில் நாங்கள்** (நோர்வே) சம்பந்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். அதற்கு தாமதமாகிவிட்டது என்று நாங்கள் சொன்னோம்.

யுத்தத்தை சமாதானமான முறையில் முடிவுக்கு கொண்டு வர பல சந்தர்ப்பங்களில் நாங்கள் முன்மொழிந்தோம். ஆனால் அப்போது எங்களால் அதிகம் செய்ய முடியவில்லை, ஏனென்றால் நாங்கள் களத்தில் இல்லை.

ஆனால், விடுதலைப் புலிகளின் சரணடையும் எண்ணம் குறித்து அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் பசில் ராஜபக்ஷவிடம் தெரிவிப்பதாக உறுதியளித்தோம். அதேபோலவே அன்றைய தினம் பிற்பகல் அவரிடம் இதனைத் தெரிவித்தோம்.

எனவே, நடேசனும் புலித்தேவனும் சரணடையும் எண்ணப்பாட்டை அரசாங்கம் நன்கு அறிந்திருந்தது" என **அவர் தெரிவித்தார். (நி)**

# தடையின்றி எரிவாயுவை விநியோகிக்க முடியும்

## லிட்ரோ நிறுவனம்

(கொழும்பு)

நாட்டில் தடையின்றி எரிவாயுவை விநியோகிக்க முடியும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

நாட்டில் எரிவாயுவிற்கான தட்டுப்பாடு நிலவுவதாக பல இடங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**இந்த நிலையில், லிட்ரோ நிறுவனத்துக்கு சொந்தமான** 4 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலிய திரவ எரிவாயு அடங்கிய கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

**இதனையடுத்து, தற்காலிகமாக ஏற்பட்டிருந்த இந்தத் தட்டுப்பாடு தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தார். (நி-5)**

# பந்து வீச்சாளர் தரவரிசையில் வணிந்து ஹசரங்கா முதலிடம்



ஐ.சி.சி. வெளியிட்டுள்ள இருபது-20 தரவரிசைப் பட்டியலில் பந்து வீச்சுப் பிரிவில் இலங்கை சுழல் நட்சத்திரம் வணிந்து ஹசரங்கா முதலிடத்தை பிடித்துள்ளார்.

சர்வதேச இருபது-20 போட்டிகளுக்கான துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி.நேற்று வெளியிட்டுள்ளது.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இலங்கையின் ஓல் ரவுண்டர் வணிந்து ஹசரங்கா 776 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளார்.

இதுவரை இருபது-20 உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கைக்காக 7 போட்டிகளில் 14 விக்கெட்டுகளை வீழ்த்திய ஹசரங்கா, தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

ஹசரங்கா ஐ.சி.சி.தரவரிசையில் முதலிடம் பிடிப்பது இது முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹசரங்காவை தொடர்ந்து தென்னாபிரிக்காவின் சுழற்பந்து வீச்சாளர் ஷம்சி 770 இரண்டாம் இடத்தில் உள்ளார். (4-6)

# லங்கா பிரீமியர் லீக் வீரர்கள் தெரிவு நாளை



2021 ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் வீரர்களைத் தேர்வு செய்வதற்கான நடவடிக்கை நாளை 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இணைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடத்தப்படும் இந்த வீரர்களின் தேர்வு இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளின் அனுசரணையில் நடைபெறும்.

போட்டியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து அணிகளின் உரிமையாளர்கள் அல்லது பயிற்சியாளர்களினால் வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அதன்படி, 300 வெளிநாட்டு வீரர்கள் மற்றும் 300 உள்ளூர் வீரர்கள் என மொத்தம் 600 வீரர்கள் இந்த ஆண்டுக்கான போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட தகுதி பெற்றுள்ளனர்.

இது கடந்த ஆண்டை விட 165 வீரர்கள் அதிகம். ஒரு அணியில் 14 உள்ளூர் மற்றும் 6 வெளிநாட்டு வீரர்கள் உள்ளடங்கலாக 20 வீரர்கள் வரை தேர்ந்தெடுக்கப்படுவர். (4-6)

# இலங்கை ஹொக்கி சம்மேளனத்தின் உபதலைவராக மதியழகன் தெரிவு



இலங்கை ஹொக்கி சம்மேளனத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவில் இலங்கை ஹொக்கிச் சம்மேளனத்தின் உபதலைவராக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் போதனாசிரியர் ஜி.டி.மதியழகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை ஹொக்கிச் சம்மேளனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான தேர்தல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விளையாட்டு அமைச்சின் டங்கன் வைற் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஹொக்கிச் சம்மேளனத்தின் தலைவராக டி.எஸ்.கே.புஸ்பகுமார, உபதலைவர்களாக ஜி.டி.மதியழகன், டி.எஸ்.விஜயசிங்க, ஆர்.மாகேஸ்வரன், பெர்னான்டோ, செயலாளராக பி.விஸ்வநாதன், உப செயலாளர்களாக பி.பஸ் நாயக்க, ஜி.எஸ்.கபுகொட்டுவ, பொருளாளராக கே.ஜெரட்ணம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(4-90)

# பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் நோவக் ஜோகோவிச் முன்னேற்றம்



பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றுப் போட்டியில், நோவக் ஜோகோவிச் வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு போட்டியில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் ஹங்கேரி வீரர் மார்டன் ஃபுசோவிஸை எதிர்கொண்டார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை 6-2 என நோவக் ஜோகோவிச் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், பதிலடி கொடுக்கும் வகையில் விளையாடிய ஹங்கேரி வீரர், அந்த செட்டை 6-4 என கைப்பற்றினார்.

இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதால், வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட்டை 6-3 என கைப்பற்றி நோவக் ஜோகோவிச் வெற்றி பெற்றார். (4-6)

# விதிமுறைகளை மீறிய நடுவருக்குத் தடை



பாதுகாப்பு வளையத்தை மீறி அனுமதி இல்லாமல் வெளியே சென்ற இங்கிலாந்து நடுவரை 6 நாட்கள் தனிமையில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

20 ஓவர் உலக கிண்ண போட்டியில் இங்கிலாந்தை சேர்ந்த முன்னாள் பட்ஸ்மேன் மைக்கேல் ஹாக் நடுவராக பணிபுரிந்து வருகிறார். சர்வதேச கிரிக்கெட் போட்டியில் சிறந்த நடுவர்களில் ஒருவராக அவர் உள்ளார்.

இந்த நிலையில் 41 வயதான மைக்கேல் ஹாக் கொரோனா விதிமுறைகளை மீறியுள்ளார். பாதுகாப்பு வளையத்தை மீறி அனுமதி இல்லாமல் அவர் வெளியே சென்றுள்ளார்.

இதைத் தொடர்ந்து உலக கிண்ண போட்டியில் அவர் தொடர்ந்து பணியாற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 6 நாட்கள் தனிமையில் இருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (4-6)

# நமீபியா தோல்வி; தொடர் வெற்றியில் பாக்.



அபுதாபியில் நேற்று முன்தினம் நடந்த இருபது-20 உலகக் கிண்ண தொடரில் பாகிஸ்தான், நமீபியா அணிகள் மோதின.

டாஸ் வென்று முதலில் பட் செய்த பாகிஸ்தான் 20 ஓவர் முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 189 ரன்கள் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரர்களான ரிஸ்வான், கப்டன் பாபர் அசாம் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்தனர். பாபர் அசாம் 70 ரன்னில் அவுட்டானார். ரிஸ்வான் 79 ரன்னுடனும், ஹபீஸ் 39 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து, 190 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நமீபியா களமிறங்கியது. கிரேக் வில்லியம்ஸ் 40 ரன்னும், ஸ்டீபன் பார்டு 29 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில், நமீபியா 5 விக்கெட் இழப்புக்கு 144 ரன்கள் மட்டுமே எடுத்தது. கடைசியில் டேவிட் வைஸ் அதிரடியாக ஆடி 43 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன் மூலம் பாகிஸ்தான் அணி 45 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (4-6)

# இராசிபலன்

**04.11.2021**
**ஐப்பசி 18, வியாழக்கிழமை**
**அமாவாசை பின்னிரவு 3.52 மணிவரை**
**சித்திரை முற்பகல் 8.09 மணிவரை**
**சுபநேரம் -7.34-9.04 மணிவரை**
**இராகு காலம்- 1.34-3.04 மணிவரை**
**சந்திராஷ்டமம்- ரேவதி**
**கேதார கௌரி விரதம், அமாவாசை விரதம்**

**வளவன்**

**மேஷம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல்நலம் சீராகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**ரிஷபம்**: குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நன்மைகள் நாடிவரும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்**: புதிய நபர்கள் அறிமுகம் கிடைக்கும், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**: சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கன்னி**: வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**துலாம்**: உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் கூடும்.

**விருச்சிகம்**: பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்ப நலனில் அக்கறை கூடும்.

**தனுசு**: மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**மகரம்**: செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், எண்ணிய காரியம் எளிதில் நிறைவேறும் நாள், செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்புண்டு.

**கும்பம்**: நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சுக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்கள் கைகூடும்.

**மீனம்**: குடும்பத்தினரிடையே சிறுசிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

**உண்மையான அன்பு எந்தவிதமான நிபந்தனையையும் விதிக்காது**

# அறத்தின் ஆட்சியையும் ஆணவத்தின் வீழ்ச்சியையும் தீபாவளி குறித்து நிற்கின்றது

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

உலகளாவிய இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் மிகவும் சிறப்புமிக்கதொன்றாக தீபாவளித் திருநாள் கருதப்படுகின்றது. இந்துக்களின் ஆன்மிக வழிபாடாகவும் பாரம்பரிய கலாசாரப் பெருவிழா வாகவும் காணப்படும் தீபாவ ளித்திருநாள் மூலம், வாழ்வின் துன்பங்கள் நீங்கி இன்பங்களை அடைந்து கொள்வதே நோக்கமாகும் என தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தத் தீபத்திருநாள், அறத்தின் ஆட்சியையும் ஆணவத்தின் வீழ்ச்சியையும் குறிக்கின்ற நாளாகும். தாமதித்தாலும் வாய்மையே இறுதியில் வெல்லும் என்பதையும் காரிருள் மறைந்து, இன்பங்கள் பெருகி, நலமும் வளமும் பெருகும் என்பதே இந்துக்களின் நம்பிக்கையாகும்.

சுற்றாடலுடன் ஒன்றுபட்டுள்ள பருவ மாற்றங்களோடு, பண்டைய காலந்தொட்டு மானிடர்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஆன்மிகப் பரிமாறல்களை மிகவும் உற்சாகமாகவும் பக்தியுடனும் கொண்டாடுகின்ற தீபாவளி நன்னாள். சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்துகிறது.

தீபாவளித் திருநாளில் பிரபஞ்சத்துக்கு பிரவேகமாகும் சுப சக்தியால் உலக மக்கள் யாவருக்கும் மகிழ்ச்சி, சௌபாக்கியம், செல்வம் மற்றும் தெய்வ அருள் கிடைக்க வேண்டும் என்று இந்தத் தீபத் திருநாளில் பிரார்த்திக்கின்றேன் என ஜனாதிபதி தெரிவித்தார். (நி-5)

# ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ வர்த்தமானி அறிவிப்பை இரத்து செய்ய வேண்டும்

## கத்தோலிக்க ஆயர் பேரவை

(கொழும்பு)

சட்டரீதியாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தில் கலந்துரையாடப்படாமல் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியினால், “ஒரு நாடு ஒரு சட்டம்” என்ற நோக்கத்தை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் அற்றுப் போயுள்ளதாக இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டவரின் கடந்த காலங்களை கருத்திற்கொள்ளாமல், தமிழ், இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ மற்றும் சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் வழங்காது, இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதால் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டுள்ளது.

சட்டத்தின் முன்பாக, சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்படும் அரசியலமைப்பு உருவாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை அறிக்கையூடாக கோரிக்கை விடுத்துள்ளது. (நி-5)

# நுவரெலியாவில்

## ஆசிரியர்களுக்கு ஆதரவாக பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்



(ஹற்றன்)

அதிபர்-ஆசிரியர் சம்பளப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் கோரி நுவரெலியாவில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும், பிள்ளைகளின் கல்வி உரிமையை உறுதிப்படுத்தவும் அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்களின் பெற்றோர்கள் சங்கத்தினால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி-5)


**21 ஆம் ஆண்டின் நினைவில்**



வாழ்வுக்காக 1960 - 01 - 08

ஓய்வுக்காக 2000 - 10 - 25

**அமரர். கந்தப்பு தவராசா [பவா]**

திதி - 04.11.2021

உந்தன் நினைவுகளால் எந்த நாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம்– நாம் ஆற
வந்து ஒரு தரம் பார்க்காயோ அப்பா?
சந்தை சந்தடிகள் கூறும் உங்கள் நாமம்
எந்த நாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தே விடுங்கள் எம்மிடம்!

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(C-2942)

நினைவுத் துயரில்
மனைவி, பிள்ளைகள்.

# அஞ்சல் அலுவலக ஊழியர்கள் யாழில் நேற்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண பிரதம அஞ்சல் அலுவலக தபால் ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதோடு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை நடை பவனியாக சென்று மகஜர் கையளித்தனர்.**

யாழ்ப்பாண பிரதம அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் பல்வேறுபட்ட இடர்களை எதிர் நோக்குவதாகவும் அஞ்சலகத்தின் நிர்வாகத்தினை உடனடியாக மாற்றுமாறு கோரியும் அதிகாலையிலிருந்து அஞ்சல் அலுவலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதோடு நடை பவனியாக வடக்கு மாகாண ஆளுநர் செயலக முன்றலிலும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-7-33)




# கிராமத்தை நோக்கிய பொலிஸ் சேவை யாழில் ஆரம்பித்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

கிராமத்தை நோக்கிய பொலிஸ் சேவை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிராமத்துக்கு இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமித்து பொதுமக்களுக்கான சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்கள் இருவரும் அந்தக் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாரத்தில் மூன்று நாட்கள் சேவையில் ஈடுபட வேண்டும்.

கிராமத்தில் உள்ள பொது மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிதல், பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் உள்ளிட்ட சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளை அந்தக் கிராமத்துக்கு கடமைக்கு அமர்த்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்னெடுப்பார்கள்.

இந்தத் திட்டத்தை வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்க மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா முயற்சி எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7-18-33)

# பஜிரோ - பேருந்து விபத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி வீதி 1ம் குறுக்குத் தெரு பகுதியில் நேற்று முன்தினம் தனியார் பேருந்தும், பஜிரோ ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இவ் விபத்தில் தனியார் பேருந்தில் பயணம் செய்த சிலர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7-33-60)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை காளி அம்மன் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ சா.கோபாலசர்மா ஆகியோரின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-7)

# 10,11 ஆம் திகதிகளில் உர விநியோகம்

## தனங்கிளப்பு கமக்கார அமைப்பு

(சாவகச்சேரி)

தனங்கிளப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட நெற் செய்கையாளர்களுக்கான உரமானியம் எதிர்வரும் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளது. எனவே பதிவு செய்த செய்கையாளர்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி பற்றுச்சீட்டுடன் கைதடி கமநல சேவை நிலையத்திற்கு காலை 9 மணிக்கு வருகை தருமாறு கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர். (4-7-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா. |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 170 | 250 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 170 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 140 | 120 |
| தக்காளி | 250 | 180 | 300 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 40 |
| கோவா | 150 | 130 | 160 | 200 |
| கரட் | 150 | 220 | 240 | 250 |
| பூசணி | 60 | 50 | 60 | 200 |
| புடோல் | 250 | 200 | 160 | 180 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 240 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 200 | 200 |
| பாகற்காய் | 450 | 490 | 350 | 800 |
| வெண்டிக்காய் | 160 | 120 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 550 | 600 | 360 | 400 |
| லீக்ஸ் | 200 | 220 | 240 | 280 |
| பீற்றூட் | 120 | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 350 | 300 | 320 | 320 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 150 | 200 |
| போஞ்சி | 350 | 280 | 320 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | 200 | -- | 170 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 500 | 400 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | -- | 300 | -- | 300 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | 120 |

# மதங்களுக்கு எதிரான வன்முறை நிறுத்தப்பட வேண்டும் - அங்கஜன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

மதங்களுக்கு எதிரான வன்முறைகள் சமூகத்தில் எதிர்பாராத விதமான பாரிய விளைவுகளுக்கு வித்திட்டு ஒற்றுமையை சீர்குலைக்கும் எனப் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலை வருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேசத்தில் உள்ள பாசித்தென்றல் குளத்தடி பாலைமரத்தடிப் பிள்ளையார் ஆலயத்தில் காணப்பட்ட பிள்ளையார் திருவுருவம் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பத்து மாதங்களுக்கு முன்னர் மத வெறியர்களால் உடைத்தெறியப்பட்ட முசலி-பாலைமரத்தடிப் பிள்ளையார் திருவுருவம் மீண்டும் கடந்த மாதம் மீள் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஒரு மாதம் கூட ஆகாத நிலையில் மீண்டும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக உருத்திர சேனை அமைப்பினால் சிலாவத்துறை விகாராதிபதியின் பங்கேற்புடன் மீள் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார் சிலை காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் செயற்பாடாகும். வடக்கில் அண்மைக் காலமாக வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்து ஆலயங்கள் திட்டமிட்டு இடிக்கப்படுவதும் தாக்கப்படுவதும் சிலைகள் திருடப்படுவதும் தொடர்ச்சியாக நடந்தேறி வருகின்றது. மதங்களுக்கு எதிரான வன்முறைகள் அடியோடு நிறுத்தப்பட வேண்டும். மத சம்பிரதாயங்களுக்கு மதிப்பளியுங்கள். அதுவே நாட்டில் நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும் என அவர் குறிப்பிட்டார். (4-5-30)

# எதியோப்பியாவில் அவசரகால நிலை பிரகடனம்

(அடிஸ் அபாபா)

**தலைநகரில் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வாழும் நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடளாவிய ரீதியில் அவசரகால நிலையினை எதியோப்பிய மத்திய அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.**

கிளச்சியாளர்கள் நகரத்தை நோக்கி முன்னேறக்கூடும் என்ற அச்சத்தின் மத்தியிலும் அடிஸ் அபாபாவிலிருந்து சுமார் 400 கி.மீ தொலைவிலுள்ள இரண்டு நகரங்களை கைப்பறியதாக தைக்ரே மக்கள் விடுதலை முன்னணி அறிவித்த நிலையிலும் அவசரகாலச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நாட்டை பாதுகாக்க ஆயுதங்களைப் பதிவு செய்து தயாராக இருக்க வேண்டும் என அதிகாரிகள் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.




மேலும் 4 இலட்சம் மக்கள் பஞ்சத்தில் வாழ்ந்து வருவதாக ஐ.நா.மதிப்பிட்டுள்ள தைக்ரேயின் முற்றுகையினை உடைக்க விரும்புவதாக தைக்ரே மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இந்நிலையில் உள்நாட்டுப் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வீட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இதனைத்தவிர வடக்கு எதியோப்பியாவின் பெரும் பகுதிகளில் தகவல் தொடர்பு முடக்கத்தில் உள்ளது.

பிரதமர் அஹ்மத் அபியின் அரசியல் சீர்திருத்தங்கள் காரணமாக ஆரம்பத்தில் வீழ்ந்த அரசாங்கத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான போர் நிறுத்த செயற்பாடுகளில் சர்வதேசம் இதுவரை தோல்வியடைந்துள்ளதுடன் அடிஸ் அபாபாவை கைப்பற்ற முயற்சிக்க வேண்டாம் என அமெரிக்க கிளர்ச்சியாளர்களை வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7-4)

# அபிவிருத்தி உத்தியோகத்தரை இடமாற்ற கிராம மட்ட அமைப்புகள் கோரிக்கை

(குருமன்காடு)

அரசாங்கத்தின் 3 மில்லியன் ரூபாய் பாதீட்டு விவகாரத்தால் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இறம்பைக்குளம் அபிவிருத்தி உத்தியோகத்தரை இடமாற்றுமாறு கோரி மூன்று கிராம மட்ட அமைப்புக்கள் கூட்டாக இணைந்து பிரதேச செயலாளர் மற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட அபிவிருத்தி குழு இணைப்பாளர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இறம்பைக்குளம் பிரதேச செயலகத்தில் கடமை புரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர் அரசினால் அறிமுகம் செய் யப்பட்ட 3 மில்லியன் ரூபாய் பாதீட்டு திட்டத்தில் தீர்மானிக்கப்படாததன்னிச்சையான பல கோரிக்கைகளை முன் வைத்துள்ளமை ஆதாரபூர்வமாக தெரிய வந்துள்ளது.

இவரினால் பரிந்துரைக்கப்பட்ட பல விடயங்கள் மக்கள் பணத்தினை வீணாக்கும் செயற்பாடு மட்டும் அன்றி ஒரு முறை கேடாகவே நாம் பார்க்கின்றோம். ஆகவே அவரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை நிராகரித்து கூட்டத்தினை மீண்டும் ஒழு ங்கு செய்து சரியான முடிவினை எடுப்பது மட்டுமன்றி, கிராம உத்தியோகத்தர் பிரி வில் இருந்து மாற்றித் தரு மாறு கேட்டுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில் சின்னப்புதுக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம், இறம்பைக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம், சகாயமாதாபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றை சேர்ந்தவர் கள் கையொப்பம் இட்டு பிர தேச செயலாளர் மற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பா ளர், மாவட்ட அபிவிருத்தி குழு இணைப்பாளர் ஆகியோருக்கு கையளித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் குறித்த இறம்பைக்குளம் அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கேட்டபோது, சுற்று நிருபத்தில் உள்வாங்க முடியாத விடயங்களை இவர்கள் கோரியமையினால் அவற்றை 3 மில்லியன் ரூபாய் பாதீட்டு திட்டத்தில் உள்வாங்க முடியவில்லை. இவ்விடயமே அவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதே தவிர வேறு எவ்வித விடயங்களும் இல்லை எனத் தெரிவித்தார். (7-250)

# கேதார கௌரி விரத இறுதிநாள் வழிபாடுகள்

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்த கேதார கௌரி விரத பூஜையின் இறுதிநாள் வழிபாடுகள் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளன.

இன்று காலை அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் தீபாவளிச் சிறப்புப் பூஜை வழிபாடுகளும் இடம்பெறும்.

கௌரி விரத பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து துர்க்கை அம்பாள் உள்வீதி எழுந்தருளி வலம் வரும் திருக்காட்சி இடம்பெறும். நண்பகல் 12 மணி முதல் அடியவர்களுக்கு கௌரிக் காப்பு வழங்கல் இடம்பெறும் என ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு . திருமுருகன் தெரிவித்தார். (4-7-18)

# அதிபர், ஆசிரியர்களுக்கு ஆதரவாக பெற்றோர்கள் நேற்று போராட்டம்

## வடக்கின் பல பகுதிகளில் முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

அதிபர், ஆசிரியர்களின் தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ்ப்பாணம் உரும்பிராயில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கிராமிய உழைப்பாளர் சங்கம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இக்கவனயீர்ப்புப் போராட்டம் உரும்பிராயில் அமைந்துள்ள கிராமிய உழைப்பாளர் சங்க அலுவலகத்தின் முன்பாக இடம்பெற்றது. இப்போராட்டத்தில் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டு அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். எங்கள் பிள்ளைகளின் இலவச கல்வியை வியாபாரம் ஆக் காதே, அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் போராட்டத்திற்கு உடன் தீர்ப்பு கொடு போன்ற பதாகைகளையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் அதிபர், ஆசிரியர்களுக்கு ஆதரவாக கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவிலும் பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(4-7-100-104-250-281-316)

# மன்னார் சோதனைச் சாவடியால் மக்கள் அசௌகரியம்

(மன்னார்)

மன்னார் பிரதான பாலத்தடியில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் தொடர்ச்சியாக மக்களை இராணுவத்தினர் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் இருந்து போதைப்பொருள் கடத்தலை தடுக்கும் நோக்குடன் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்து மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் பலத்த சோதனைகளை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக சிறு வியாபார மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கை களில் ஈடுபடுபவர்கள், குறித்த சோதனை நடவடிக்கை காரணமாக பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

அன்றாடத் தொழில் நடவடிக்கைகளுக்கென மன்னாருக்கு வருகை தரும் மக்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் என அனைவரும் பாரபட்சம் இன்றி சோதிக்கப்படுவது மன்னார் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதே நேரம் மழை நேரங்களிலும் மழை நீர் மற்றும் சேற்றுக்குள் இறக்கி கடுமையாக சோதனை மேற்கொள்ளப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த சோதனைச் சாவடியில் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்காத வகையில் அப்பகுதியில் உள்ள சோதனைச் சாவடியை அகற்றி அல்லது வேறு பகுதிக்கு மாற்றி துரித நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(7-4-285)

# மக்களது பிரச்சினைக்கு அரசிடம் தீர்வு இல்லை

# மாற்று அரசாங்கமே நாட்டிற்கு தேவை

## ரஞ்சித் மத்தும பண்டார



(குருமன்காடு)

**மக்களது பிரச்சினைகளுக்கு சரியான நேரத்தில் தீர்வு கொடுக்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களுடனான கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், ஒரே நீதி, ஒரே சட்டம் என்று சொல்லப்படுகின்றது.

ஆனால் இங்கு நீதி இல்லை. இந்த நாட்டில் அனைத்து மதங்களும் வாழும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். அனைத்து மதத்தவர்களும் சமனாக வாழக் கூடிய நிலையை உருவாக்க வேண்டியது எமது பொறுப்பு. நாட்டில் தற்போது கொவிட் தொடர்பான சிறந்த கட்டமைப்பு இல்லை.

பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எந்தப் பிரச்சினைக்கும் சரியான நேரத்தில் தீர்வு கொடுக்கக் கூடிய நிலையில் இந்த அரசாங்கம் இல்லை.

சரியான நேரத்தில் தீர்மானங்களை எடுத்திருந்தால் தொற்றாளர்கள் எண்ணிக்கையினையும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையினையும் குறைத்திருக்கலாம்.

இந்த அரசாங்கத்தின் சீனி மோசடி. பருப்புக்கான விலை அதிகரிப்பு, தேங்காய் எண்ணெய் இன்மை, எரிவாயுவின் அதிரடியான விலையேற்றம் என்பன மக்கள் வாழ முடியாத நிலையை உருவாக்கியுள்ளது. இதனால் மாற்று அரசாங்கத்தை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

தற்போது சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற பசளை தொடர்பில் பேசப்படுகிறது. அரசாங்கத்தில் உள்ள சிலர் அந்த பசளை வேண்டும் என்று சொல்கிறார்கள்.

அரசாங்கத்தில் உள்ள இன்னும் சிலர் அந்த பசளை வேண்டாம் என்கிறார்கள். அவர்களுக்குள்ளேயே முரண்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படியான அரசாங்கத்தை எங்களுடைய அரசாங்கமாக வைத்திருக்க வேண்டுமா?

குறிப்பாக அரச சொத்துக்களை விற்பனை செய்ய மாட்டோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ அரசாங்கம் தமது ஆட்சிக் காலத்தில் அரச சொத்துக்களை பங்கிட்டு விற்பனை செய்து வருகின்றனர்.

எனவே ஊழல் நிறைந்த, வளங்கள் இல்லாத இந்த ஆட்சியை மாற்ற வேண்டும். இந்த நாட்டின் முதுகெலும்பாகவுள்ள விவசாயிகளின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (7-4-250)

## சட்ட விதிமுறைகளுக்கமைவாக மருந்தகங்கள் செயற்பட வேண்டும்

### வவுனியா சுகாதாரப் பணிப்பாளர்

(குருமன்காடு)

வவுனியாவிலுள்ள மருந்தகங்கள் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள மருந்தகங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் அதிகரித்த நிலையில் மருந்தக உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்விடயத்தினை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் கொவிட்-19 தொற்று காரணமாக சுகாதாரப் பிரிவினருக்கு ஏற்பட்ட வேலைப்பளுவுக்கு மத்தியில் மருந்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்த முடியவில்லை. எதிர்வரும் காலங்களில் மருந்தகங்கள் மீது மிகக் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன், மருந்தக உரிமையாளர்களுக்கு சட்ட திட்டங்கள் தொடர்பில் தெளிவு வழங்கப்பட்டு அந்த சட்ட திட்டங்களுக்கு இணங்க செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மருந்தகங்களில் மருந்தாளர் கட்டாயமாக்கப்பட்டதுடன் மருந்துகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மாத்திரம் கொள்வனவு மேற்கொள்ளல்,

வைத்தியரின் சிபாரிசு இன்றி மருந்துகள் வழங்கப்படக் கூடாது. மருந்தகங்களில் பணியாற்றும் மற்றைய ஊழியர்களும் மருந்துகள் தொடர்பிலான அறிவுகளைப் பெற்றிருத்தல் அவசியம். மருந்தகங்களுக்கான குளிரூட்டி ஆகியவற்றினை மருந்தகங்கள் பின்பற்றத் தவறினால் அந்த மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் சுகாதாரப் பிரிவினர், மருந்தக உரிமையாளர்கள், உணவு, மருந்து பாதுகாப்பு அதிகாரி, வர்த்தக சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (7-4-250)

## மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா வைரவபுளியங்குளத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா புகையிரத நிலைய வீதியிலிருந்து குருமன்காடு நோக்கி ஒரே பகுதியால் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளை செலுத்திய இருவரும் காயமடைந்துள்ளனர்.

இவ் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.. (7-4-299)



மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக 19 ஆம் கட்டை குமுழமுனை வீதி மற்றும் ஜெயபுரம் மாதா சொரூப வீதி என்பன நிரந்தர வீதிகளாக அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளன.

(படம்:கிருஷ்ணகுமார்)

## வவுனியாவில் ஆரம்ப பிரிவு மாணவர்கள் இருவருக்கு தொற்று

(குருமன்காடு)

வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றின் இரு ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம் 1 மற்றும் தரம் 5 மாணவர்களின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து அவர்களின் பெற்றோர் நேற்று அன்டிஜன் பரிசோதனையை மேற்கொண்டனர். இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குறித்த இரு மாணவர்களுக்கும் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காண சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (7-4-250)

# தீபாவளி சிறப்பு மலர்-04.11.2021



## பகையை மறந்து நற் பண்பை வளர்ப்போம்

இந்து மக்களின் இனிய பண்டிகை விழாக்களில் தீபாவளி சிறப்பிற்குரியது. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டிய மேன்மையை உலகிற்கு விளக்கும் உன்னத நாள் தீபாவளி. நரகாசுரன் என்னும் அசுரனின் ஆட்சி பல அப்பாவிகளுக்கு இடையூறு தந்தது. குற்றமேதும் அறியாத மக்கள் கிருஸ்ணபரமாத்மாவிடம் மன்றாடியதன் விளைவாக நரகாசுரன் வதம் செய்யப்பட்டு மக்களின் இருள் அகன்றது. அறியாமை என்னும் ஆணவத்தால் பிறரைத் துன்புறுத்திய நரகாசுரன் வீழ்ந்த நாளை விளக்கேற்றிக் கொண்டாடும் மரபு பல ஆயிரம் ஆண்டுகளாக வழக்கமாகி விட்டது.தீபாவளித் திருநாள் எல்லோருக்கும் பாடம் புகட்டுகின்ற உன்னத திருநாள். தர்மத்திற்கு மாறாக எவர் எதைச் செய்தாலும் இறைவன் தர்மத்தைக் காப்பதற்கு வருவான் என்ற மேன்மையை உலகிற்கு உணர்த்துகின்ற நாள்.

அன்பர்களே பிறருக்குத் தீமை எண்ணாது இப் பிறவியில் நல்ல விடயங்களைக் கருத்தில் கொண்டு வாழ முற்படுங்கள். மனித வாழ்வு கடவுள் எமக்குத் தந்த அரிய சந்தர்ப்பம். அதனை ஒவ்வொருவரும் நன்றாக உணர்ந்து கொள்ளுங்கள். எங்கள் நாட்டிலே நீதியான, நேர்மையான ஆட்சி உருவாக வேண்டுமென்று பிரார்த்தியுங்கள். நாமும் நல்லவண்ணம் வாழ்ந்து பிறரையும் நல்ல வண்ணம் வாழ துணை செய்வோம். ஒவ்வொருவரும் பகையை வளர்க்காது நல்ல பண்பை வளர்த்து வாழப் பழகுவோம். தீபத்திருநாளில் எங்களிடம் உள்ள அறியாமை போக வேண்டுமென்று தெய்வ சந்நிதானங்களுக்குச் சென்று வணங்குவோம்.

கொரோனா என்கின்ற கொடிய நோய் உலகத்தை ஆட்டிப்படைத்து விட்டது. கண்ணுக்குத் தெரியாத கிருமி எத்தனை எத்தனை இலட்சம் மக்களைப் பறித்து விட்டது. உலகம் என்ற இயற்கையை வெல்ல முடியாது என்பதனை நன்றாக உணர்ந்து விட்டது. இனிய தீபாவளி நாளில் இயற்கைத் தெய்வங்களை எல்லோருக்குமாகவும் மன்றாடுவோம். வைத்தியசாலைகளில் நோய்களோடு வருந்திக் கொண்டிருப்பவர்களுக்காகவும், வறுமையில் வாடிக் கொண்டிருப்பவர்களுக்காகவும் கடவுளை மன்றாடுவோம். தீபாவளித் திருநாளில் அனைவருக்கும் விடிவு கிடைக்க வேண்டுமென பிரார்த்திப்பதோடு அன்பர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர் ,ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். சிவபூமி அறக்கட்டளை**
**உபதலைவர் , அகில இலங்கை இந்துமாமன்றம்**



## எங்கும் தீப ஒளி பரவட்டும்

இன்று தீபாவளியை கொண்டாடிக் கொண்டிருக்கும் அனைத்து தமிழ் மக்களுக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். தீபாவளி என்பது நரகாசுரன் என்ற தீயவனிடமிருந்து போராடி அவனை அகற்றிவிட்டு மக்களை காப்பாற்றி நல் வாழ்க்கையை கொடுத்ததை ஞாபகப்படுத்தி கொண்டாடும் ஒரு திருநாளாகும். இவ் விடயத்தை ஒரு படிப்பினையாக எடுத்து நமது வாழ்விலும் நல்வழியை எடுத்து நடந்து கொள்வதுடன் இந்நாளில் நம் போன்ற ஏழை எளியவர்களும் இத் தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட நம்மால் முடிந்த உதவிகளைச் செய்து மகிழ்ச்சியடைவைப்போமாக..

**மௌலவி B.A.S. சுப்யான்**
**தலைவர் மக்கள் பணிமனை யாழ்ப்பாணம்.**



## ஒளியை ஏற்றி இருளை அகற்றுவோம்

2021 ஆம் ஆண்டிற்குரிய ஒளியின் பெருவிழாவான தீபாவளிப் பெருவிழாவை உலகம் முழுவதிலும் கொண்டாடும் இந்து சமய சகோதரர்கள் அனைவர்க்கும் அன்பான தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

குடும்ப உறவுகள் மற்றும் நட்பு வட்டங்களில் கொண்டாடப்படும் விழாக்கள் எப்போதும் மகிழ்வானவை. அன்பையும் உறவையும் வளர்ப்பவை. இந்த வகையில் 2021 ஆம் ஆண்டிற்குரிய தீபாவளிப் பெருவிழா உங்கள் குடும்ப மற்றும் நட்பு உறவுகளைப் புனிதப்படுத்தி புதியதாகக் அன்பையும் புரிந்துணர்வையும் எதிர்கால நம்பிக்கையையும் வளர்த்து ஒளியைத் தரும் ஒரு விழாவாக அமைய வாழ்த்துகிறோம்.

இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவதே சிறந்தது. ஒளியை எல்லோரும் விரும்புகிறார்கள். ஒளியில் எல்லோரும் வாழவே விரும்புகிறார்கள். இருளைப் பார்த்து எல்லோரும் பயப்படுகிறார்கள். இருள் வேண்டாமென ஒளியை ஏற்றுகிறார்கள்.

இருளுக்கும் ஒளிக்குமான போராட்டத்தில் ஒளியே வெல்ல வேண்டும். நன்மைக்கும் தீமைக்குமான போராட்டத்தில் நன்மையே வெல்ல வேண்டும். இருள் நிறைந்த துன்பமான வேதனைமிக்க வாழ்வை விடுத்து ஒளி மிகுந்த மகிழ்ச்சியான வாழ்வையே எல்லோரிற்கும் நாம் ஆசிக்க வேண்டும். இதையே நற்செய்தி ஏடுகள் பின்வருமாறு தெரிவிக்கின்றன.

நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்... எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை. மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்போது தான் அது வீட்டில் உள்ள அனைவர்க்கும் ஒளி தரும். இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க. அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணக தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள். (மத்தேயு 5: 14 -16)

கொரோனா என்னும் இக்கொடிய நோய் உலக மக்கள் அனைவரையும் எந்த வேறுபாடுமின்றி தாக்கி அழித்து வருகிறது. எல்லா மக்களும் ஏதோ ஒரு வகையில் இந்தக் கொடிய நோயின் விளைவால் தாக்கப்பட்டுள்ளனர். தொழில் துறையின்றி மக்கள் வளம் இழந்து வாழ்கின்றனர். கோலங்கள், கொண்டாட்டங்கள், பயணங்கள் இன்றி மக்கள் வீடுகளில் முடங்கி விரத்திக்குள்ளாகியுள்ளனர்.

பாடசாலைகள், விளையாட்டுக்கள் என்பன இன்றி மாணவர்கள் சோர்ந்து போயுள்ளனர்.

இவர்களோடு கூட வாழ்வில் நம்பிக்கை இழந்து விரக்தியில் வாழ்வோர்-எல்லோரும் கைவிட்டு வீடுகளிலும் வயோதிப இல்லங்களிலும் தனிமையில் வாடுவோர்-வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் வருத்தத்தில் இருப்போர்-சிறையிலும் தடுப்பு முகாம்களிலும் அல்லற்படுவோர்- அடுத்த நேர உணவு என்ன என ஏங்குவோர் எனப் பலர் உள்ளனர். இவர்களே இன்று இருளில் இருப்பவர்கள். இவர்களுக்கே நாம் இன்று ஒளியேற்ற வேண்டும்.

இவர்களுடைய வாழ்வில் ஒரு தரிசிப்பால்- ஒரு அன்பான வார்த்தையால் - அமைதியான செவிமடுத்தலால்- நம்பிக்கையூட்டும் ஒரு செயலால்- ஒரு சிறிய அன்பளிப்பால் - ஒரு நேர உணவால் கொரோனா விதி முறைகளைக் கடைப்பிடித்து ஒளியைக் காட்ட முடியுமாயின் அதுவே நாம் கொண்டாடும் சிறந்த அர்த்தமுள்ள தீபாவளிப் பெருவிழாவாகும்.

நம் வாழ்வு ஒளியின் வாழ்வாகும். நாம் உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க என்ற வார்த்தைகளை நம்முடையதாக்கி வாழும் மக்களாவோம். ஒளியின் விழாவில் இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**மேதகு கலாநிதி.யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
**யாழ். ஆயர்.**

# அதர்மத்தை அழித்து மனங்களில் அறத்தை வளர்க்கும் மகத்துவமிக்க தீபாவளி




தீபாவளி எனப்படுவது தீபங்களால் ஒளியேற்றும் பண்டிகையாகும். தீபங்களின் ஒளியானது இருளை அகற்றுவது போல மக்களின் வாழ்க்கையின் இருண்ட காலகட்டங்களை நீக்கி ஒளியான சுபீட்சத்தைத் தருவதே தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் சாராம்சமாகும்.

இப்பண்டிகை ஐப்பசி மாதத்தில் திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை மற்றும் அதற்கடுத்த சுக்கிலப்பிரதமை ஆகிய நாட்களில் கொண்டாடப்படுகிறது. தமிழ் நாட்டில் சில ஆண்டுகளில் அமாவாசை முன்தினம் நரக சதுர்த்தசி அன்று கொண்டாடுகிறார்கள். எனினும் பெரும்பாலும் தீபாவளிப் பண்டிகை, ஈழம் உட்பட ஐப்பசி மாதத்தில் அமாவாசை தினத்தில் கொண்டாடப்படுகிறது. இது ஆங்கில மாதத்தில் (கிரகொரியின் நாட்காட்டிப்படி) ஒக்டோபர் மாதம் 17 இலிருந்து நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் வரும் அமாவாசை தினத்தில் கொண்டாடப்படுகிறது.

### சரித்திர -கர்ண பரம்பரைக்கதைகள்

ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் கிருஷ்ண பரமாத்மா, நரகாசுரனை வெற்றி கொண்ட நிகழ்வாகத் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

வட இந்தியாவில் ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தி, இலங்கேஸ்வரன் இராவணனை வெற்றி கொண்டு சீதாப்பிராட்டி, இலக்குவன் சகிதம் அயோத்தி இராச்சியத்துக்கு மீண்ட தினமாகத்தீபாவளி கருதப்படுகிறது.

மேற்கிந்தியாவிலோ விஷ்ணு பரமாத்மா பக்தர்களை இரட்சிக்கும் பொருட்டு அசுர அரசன் பாலியை நரக லோகத்தை ஆள அனுப்பி வைத்த தினமாக இப்பண்டிகை வழங்கப்படுகிறது.

இப்போது வழங்கி வரும் கர்ண பரம்பரைக் கதைகள் சிலவற்றைப் பார்ப்பது இந்து சமயத்தின் தொன்மையையும் அறிய விளையும் இளைய சமுதாயத்தினருக்கு நன்மை பயப்பதுடன் நவீன உலகத்தின் வேகத்திலே எமக்கு, எமது பாரம்பரியங்களை மழுங்கடித்து மறக்க வைக்காமல் இருக்க உதவவல்லன.

### ஈழத்து மற்றும் தமிழகக் கலா சாரங்களுடன் கூடிய புராணக்கதை

விஷ்ணு பரமாத்மா பன்றி உருவம் கொண்ட வராக அவதாரம் எடுத்தபோது அவரது ஒரு மனைவி பூமாதேவியின் புதல்வனாகப் பிறந்த சிசுவுக்கு பவுமன் என்ற பெயர் சூட்டப்பட்டது. பவுமன் என்றால் பலமானவன் என்று பொருள்படும். பவுமன் பிராக்ஜோதிசா என்ற நாட்டை அரசாண்டு வருங்காலத்திலே சாகாவரம் வேண்டிப் பிரம்ம தேவரை நோக்கிக் கடும்தவம் இயற்றினான். பிரம்ம தேவரும் பவுமனின் தவத்தால் மகிழ்ந்து அவன் முன் காட்சி கொடுத்து, வேண்டும் வரம் கேட்டார். பவுமனின் கோரிக்கை உலக வழக்கத்துக்கு ஒவ்வாதது என்று கூறி வரத்தை மாற்றிக் கேட்க பிரம்மன் பணித்தார். எனினும் சாகாவரத்திலேயே குறியாக இருந்த பவுமன், வரத்தைச் சிறிது மாற்றித் தனது தாயால் மட்டுமன்றி வேறு ஒருவராலும் மரணம் நேராதிருக்க வரம் வாங்கிக் கொண்டான். காலப் போக்கில் மனித உருவிலிருந்து அசுர உருவைப் பெற்றதால், பவுமன், நரகாசுரன் என்ற பெயர் பெற்றான்.

அத்துடன் அவனது நடவடிக்கைகளும் தீவிரமாகிப் பெண்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். அவர்களது உடைமைகளைச் சூறையாடி அவர்களைச் சிறைபிடித்துத் துன்புறுத்தினான். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் கடவுள்களின் தாய் எனக் கருதப்படும் அதிதியின் காதுவளையங்களையும் திருடினான். இவனது கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வரத் திருமாலின் இன்னொரு அவதாரமான கிருஷ்ண பரமாத்மா தனது அவதாரத்தின் போது தனது துணைவி சத்யபாமாவின் துணையுடன் நரகாசுரனை வதம் செய்தார்.

சத்யபாமா, பூமாதேவியின் அவதாரமாவார். சிறையிலிருந்த பெண்களை மீட்டதோடு கிருஷ்ண பரமாத்மா, அதிதியின் ஆபரணங்களையும் மீட்டுத் தேவர்களுக்குக் கொடுத்தார். நரகாசுரனைச் சம்காரம் செய்த கிருஷ்ண பரமாத்மா எண்ணெய் தேய்த்துத் தலை முழுகினார். வதம் செய்த போது நரகாசுரனின் கோரிக்கையான தனது மரணத்தை தீமைகள் அழிந்த நாளாகத் தீபமேற்றி உலக மக்கள் கொண்டாட வேண்டும் என்பதைக் கிருஷ்ணபிரான் அங்கீகரித்து உலக வழக்காக்கியதே தீபாவளிப் பண்டிகையாகும்.

இந்தியா,நேபாளம், மியன்மார், சிங்கப்பூர், பிஜி போன்ற நாடுகளில் அரச விடுமுறை தினமாக தீபாவளித் தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலும் அவ்வாறே அரச விடுமுறை தினம் என்பது நாம் அறிந்ததே. இந்துக்கள் மட்டுமன்றி, சீக்கியர்கள் மற்றும் சமணர்கள் கூட மேற்குறிப்பிட்டவாறு, இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காகக் கொண்டாடுகின்றனர். மலேசியா, சிங்கப்பூர், மற்றும் பல வெளிநாடுகளில் இந்து மதத்து. இந்திய வம்சாவழியினரும் தீபாவளியைக் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர்.

### தீபாவளியைக் கொண்டாடும் முறை

தீபாவளி அன்று அனைவரும் அதிகாலையில் எழுவர். எண்ணெய்க் குளியல் (கங்கா குளியல்) செய்வர். மக்கள் புத்தாடை உடுத்தியும், பட்டாசுகள் வெடித்தும், இனிப்புக்கள் நிறைய செய்து ஒருவர்க்கொருவர் பரிமாறிக் கொள்வர். பரிசுகள் தந்து மகிழ்வர். பெரியோரை வணங்கி வாழ்த்துப் பெறுவர்.

லஷ்மி பூசைக்காகக் குடும்பங்கள் கூடிப் பிரார்த்தித்து, இனிப்பு உண்டு, பட்டாசுகள் வெடித்துக் கொண்டாடுவார்கள்.

தீபாவளி நிகழ்வு இந்து மக்களின் ஒரு முக்கியமான பண்டிகை ஆகும். இது விரைந்து வரும் நாகரிக மோகத்தில் தொலைந்து விடாது எம்மக்களை சமய சம்பிரதாயங்களுடன் வாழ்வதை உறுதிப்படுத்தும் இந்து வாழ்க்கை நெறி என்று கூறுவது, மிகையற்ற கூற்றென்றே நாம் துணிந்து கூறலாம்.

**அகில இலங்கை இந்துமா மன்றம்**

# தீபாவளி சிறப்பு மலர்-04.11.2021


அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்



அழகிய தங்க
நகைகளுக்கு நீங்கள்
நாட வேண்டிய ஒரே
இடம்! தங்கமான உறவு
இப்பொழுது புதிய
பொலிவுடன்
நியூ உதயா ஜுவல்லர்ஸ்

No: 91, Power House Road,
Jaffna
Tel: 021 222 2031
newuthyajewellers@gmail.com



நியூ உதயா ஜுவல்லர்ஸ்

(C-2939)

NEW Uthayaa JEWELLERS

இல.91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2031



# நலம் தரும் சித்த ஆயுர்வேத சிகிச்சை

யாழ்ப்பாண, இந்திய கேரள ஆயுர்வேத சித்த மருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்கவிளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது.



சித்த ஆயுர்வேத சத்திர சிகிச்சைகளில்

1. முள்ளந்தண்டுப் பிரச்சினை (முள்ளந்தண்டு விலத்தல், தேய்வு, வெளித்தள்ளல்)
2. முறிவு நெறிவு
3. மாறாத புண்கள் (நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட புண்கள் சிறப்புச் சிகிச்சை)
4. நாளப்புடைப்புகள் (வரிக்கோஸ்)
5. மூட்டுக்களில் ஏற்படும் தேய்வு
6. குதமார்க்கத்தில் ஏற்படும் கட்டிகள், பிஸ்ரியுலா, நாடி புண்கள் (சைனஸ்)
7. மூலநோய்கள்
8. தோல்நோய்கள் ( மருத்துவ அட்டைவிடல் சிகிச்சை)
9. ஆணிக்கூடுகள் (அக்கினி கர்ம சிகிச்சை)
10. இதய அடைப்பு (இருதய நாடிகளில் ஏற்படும் படிவுகள்)
11. குதிக்கால் வாதம், மணிக்கட்டுகளில் ஏற்படும் விறைப்பு (அக்கினி கர்ம சிகிச்சை)
12. தோள் மூட்டுவலி
13. சிறுநீரகக் கற்கள்



இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு

**Dr. G.Sritharan B. S.M.S. (SL) M.Phil (Jaf) PGD. in Ayurvedic surgery (Scholar) (Kelany) PHD (India)**
**Reg. No. 10093**



1. பாரிசவாதம்
2. வாதரோகங்கள்
3. சர்மரோகங்கள்
4. இருமல், முட்டு .சளி, வயிற்றுப்புண், சோரியாசிஸ், மலக்கட்டு, சிறுநீரக நோய்கள்
5. மானசீகரோகம்
6. மாதர்நோய்கள்
7. மாறாத தலைவலி
8. உடல்நிறை குறைத்தல்



இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு

**Dr.(Mrs) S.Anpuchelvy B.S.M.S.(SL) M.D.(S) (India)**
**Reg.No.10434**

(C-2946)

பொது மருத்துவ நிபுணர்.

சித்த மருத்துவ நிபுணர்களினால் பாரிசவாதம், நரம்புத் தளர்ச்சி, பேச்சுக் குறைபாடு, கண்ணில் ஏற்படும் பாதிப்பு, காது கேட்பதில் உள்ள குறைபாடு, முள்ளந்தண்டுப் பிரச்சினை, இளமையில் ஏற்படும் முதுமை போன்றவற்றுக்கு பஞ்சகர்ம சிகிச்சையும் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, ஆஸ்துமா போன்றவற்றுக்கு Herbal Nebulaization & Nasal Therapy முகப்பரு, தலைமுடி உதிர்தல், வயிற்றுப்புண், நீரிழிவு, இருதயப் பாதிப்பு, வாதரோகங்களுக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்படுகிறது.

**வைரஸ் போன்ற நிலைகளில் ஏற்படும் சுவாசப் பாதை அழற்சிகளை தடுப்பதற்கான மூச்சுப் பயிற்சி [காபனல பஸ்தி] காயகல்ப்ப பயிற்சி, மூச்சுப் பாதைகளுக்கான மூலிகை ஆவி பிழத்தல் [தற்கால குளிர்காலம் ஆகையாள் வேலைக்கு செல்பவர்கள் இச்சிகிச்சையினை மேற்கொள்ளுவதால் கொரோனா பாதுகாப்பினை ஏற்படுத்த முழயும்] இயற்கையான நோயெதிர்ப்பு சக்தியினை பொதுமக்களுக்கு வழங்குகின்றோம்.**

**முக்கிய குறிப்பு:- தொழில் நிமித்தம் செல்பவர்கள் காலையில் உங்கள் வேலைகளை இலகுவாக்க தொலை பேசியில் நேரத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்**

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5.30 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல. 021 222 2537, 075 041 3579, 077 820 1195. முற்பதிவு அவசியம்.

**Herbal Health Care Centre** ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்
65, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)

# தீபாவளி சிறப்பு மலர்-04.11.2021




Ruby ரூபி Jewellery

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்

## ரூபி ஜுவல்லறி



சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்

எம்மிடம் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு
செய்யும் வசதியும் உண்டு.

(C-2944)



இல.227-229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 6919, 077 734 4074, 077 739 6176

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்

## த.சங்கரப்பிள்ளை

TS அன் சன்ஸ்

பட்டுப் புடைவைகள்,
சாறி வகைகள்
மற்றும் அனைத்து விதமான
ஆடைத் தெரிவுகளுக்கும்
நாட வேண்டிய ஒரே இடம்



21, நவீன சந்தை,
மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9965

225C, மின்சார நிலைய வீதி,
(வைத்தியசாலை அருகாமை)
யாழ்ப்பாணம்.
021 221 5397

(C-2941)

## VENUS AQUA

RO SYSTEMS

RO WATER PURIFIERS




SLR 27,599/=

இலங்கையில் எங்கும் இல்லாத மாடல்கள்!
எங்கும் இல்லாத விலைக்கழிவுகளுடன்...




VENUS ENTERPRISES
No 110 Manipay Road
Jaffna Srilanka
Venusroslk@gmail.com

0212217744
0766781031

அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

## TKT Mark நல்லெண்ணெய்

No.1

4 ஆவது தலைமுறையாக இன்றும் அதே தரத்துடன் பாரம்பரிய பழைய முறையில்
மரச்செக்கிலிருந்து ஊற்றியெடுக்கப்படும் நல்லெண்ணெய்

It's an Authentic Sesame Oil and The Best One in Our Products

மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்...

தயாரிப்பாளரும் ஏக விநியோகத்தரும்

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, மூத்த நயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

T.P: 0778328828, 0776528633, 0212255718

(C-2947)



தீபாவளி சிறப்பு மலர்-04.11.2021




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

மயூரன்ஸ்

நகை மாளிகை

95, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 2223015, 077 651 0251




S.S. மொபைல்

சந்திரலிங்கம் சறோஜினிதேவி

No: 65, ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.
076 2538472/ 077 8444899

(C-2940)

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி
நல் வாழ்த்துக்கள்

ஸ்ரீ குமரன் நகை மாளிகை

Sree Kumaran Jewellers

அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க அழகிய
தரம் குன்றாத தங்க ஆபரணங்களை
உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

இல 74, பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

021 226 4465
077 873 3482






(C-2943)

# இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

"சுத்தமான நீர், சுகமான வாழ்வு"




மாபெரும் விலைக் கழிவு

**Rs.29,000/=**

~~Rs 35,000/=~~

TDS <2000PPM

* இலவச நீர் பரிசோதனையுடனும்,
* மிகக் குறைந்த விலையிலும்,
* அதிகபட்ச உத்தரவாதத்துடனும்,
* எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
* வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்
* 24 மணித்தியாலத்தினுள் முறைப்பாட்டு திருத்திக்கொடுத்தல்



(C-2948)

Yarl Smart Water Solution

**YARL SMART** *Water solution (Pvt) Ltd.*

341, KKS Road, Jaffna / Karadippoku Junchtion, Jaffna Road, Kilinochchi.

**021 430 0044, 076 666 5267**

yarlsmartwater@gmail.com / www.yarlsmartwater.com

# பதவியின் மூலம் அடக்க முடியாது

## மக்களுக்கான எனது குரல் ஒலிக்கும்

### முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

(கொழும்பு)

**எவ்வாறான நியமனங்கள் வழங்கப்பட்டாலும் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டத்தை, அவர்களுக்கான எனது குரலை யாரும் அடக்க முடியாது என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.**



முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் குரலை அடக்கும் நோக்கத்தில் தான் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டதாக சில தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

எனினும் இதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த பதவி ஜனாதிபதியின் விருப்பத்தின் பெயரில் தரப்பட்டது.

எவ்வாறான நியமனங்கள் வழங்கப்பட்டாலும் எனது குரலை யாரும் அடக்க முடியாது. எவ்வாறான வரப்பிரசாதங்களுக்கும் நான் ஏமாந்தவன் இல்லை. எதனாலும் என்னை ஏமாற்ற முடியாது.

எனது குரல் எப்போதும் ஓங்கியிருக்கும். அது எப்போதும் மக்களுக்காக இருக்கும். தவறுகளை தட்டிக்கேட்பேன், சுட்டிக்காட்டுவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# கப்ராலுக்கு எதிரான மனு நிராகரிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

குறித்த மனு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சராக பதவி வகித்து வந்த அஜித் நிவாட் கப்ரால், அப்பதவியிலிருந்து விலகிய தன் பின்னர், மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனமானது, சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து அதனை சவாலுக்கு உட்படுத்தும் வகையில், தென்மாகாண முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சுற்றுலாப் பயணிகளுக்கு தடுப்பூசி அட்டை கட்டாயம்

(கொழும்பு)

சுற்றுலா செல்வோர் கட்டாயம் தடுப்பூசி அட்டைகளை தம்வசம் வைத்திருக்க வேண்டுமென சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் தளங்களுக்கு செல்லும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தடுப்பூசி அட்டைகளை வைத்திருக்குமாறு சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க் தெரிவித்தார். (நி-5)

# வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

(அராலி)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்ட கூட்டமானது தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் நேற்று நடைபெற்றது. தவிசாளரால் வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்களும் காரசாரமாக இடம்பெற்றது.

இதனையடுத்து பாதீடானது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது 12 மேலதிக வாக்குகளால் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (4-7-104)

# உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்தில் இன்று உர விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் ஊடாக வழங்கப்படும் சேதனப் பசளை விநியோகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்தில் வழங்கப்படவுள்ளது.

எனவே சேதனப்பசளையைப் பெற வரும் விவசாயிகள் தேசிய அடையாள அட்டை, ஏக்கர் வரி கட்டிய பற்றுச்சீட்டு என்பவற்றையும் கொண்டுவரும்படியும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பேணும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு கமக்கார அமைப்பின் தலைவர் மற்றும் (தொலைபேசி இல-077 199 4926), செயலாளருடன் (தொலைபேசி இல-077 706 2237) தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (4-5)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

Viber: 076 636 3378

E.mail:

valampurii@yahoo.com



குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



மனவளக்கலை யோகப் பயிற்சிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் முழுமைநல வாழ்விற்கான எளியமுறை குண்டலினி யோகப் பயிற்சிகளாகிய

- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கு : எளியமுறை உடற் பயிற்சிகள்
- மன அழுத்தம் குறைய : எளியமுறை தியானப் பயிற்சிகள்
- உயிர்ச்சக்தியை அதிகரிப்பதற்கு : காயகல்பப் பயிற்சிகள்

போன்றவற்றை அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிக்க இருக்கின்றன. எனவே அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்: 06.11.2021 (சனிக்கிழமை)**
**நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரைக்கும்**
**பயிற்சிகளை வழங்குபவர் : துணைப் பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் அவர்கள்**

குறிப்பு: பயிற்சியானது கொவிட்-19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக நடைபெறும்.

தொடர்புகளிற்கு : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல.021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309

(C-2949)

# பழைய பெயருடன் இலங்கைக்குள் மீண்டும் சீன உரக் கப்பல்

(கொழும்பு)

சில நாட்கள் காணாமற் போயிருந்த சீனாவின் உர கப்பல் Sea of Sri Lanka எனப்படும் இலங்கை கடற் பரப்பிற்குள் நேற்று முன் தினம் மீண்டும் நுழைந்தது.



மாத்தறை - வெலிகமை யில் இருந்து 61 கடல் மைல் தொலைவில் குறித்த கப்பல் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

பனாமா கொடியின் கீழ் பயணிக்கும் குறித்த கப்பல் மீண்டும் சர்வதேச கப்பல் போக்குவரத்து தொடர்பிலான தரவுக் கட்டமைப்பில் மீண்டும் Hippo Spirit என்ற பெயரில் பயணிக்கிறது.

பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பக்றீரியா அடங்கியுள்ளதாக தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவையினால் இரண்டு தடவைகள் உறுதிப்படுத்தப்பட்ட 20 மெற்றிக் தொன் சேதனப் பசளையை ஏற்றி குறித்த கப்பல் பயணிக்கிறது.

குறித்த கப்பல் சீனாவுக்கு திருப்பி விடப்பட்ட போதும் அது சீனாவுக்கு செல்லாமல் ஜப்பான் ஜல சந்தியில் சில நாட்கள் தரித்து நின்றது.

பின்னர் வேறு பெயரில் மீண்டும் இலங்கையை நோக்கி வந்த நிலையில் திடீரென காணாமல் போனது. இந்த நிலையில் மீண்டும் அது தனது பழைய பெயருடன் இலங்கைக்கடல் எல்லைக்குள் நுழைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி-5)

# முக அங்கீகார வசதியை நீக்கியது மெட்டா நிறுவனம்

(வோஷிங்டன்)

முகப்புத்தக செயலியில் உள்ள முகத்தை அடையாளம் காணும் முக அங்கீகார வசதியை நீக்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.




இது தொடர்பில் மெட்டா என அண்மையில் தனது பெயரை மாற்றிக் கொண்ட Facebook நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த முக அங்கீகார வசதியால் தனியுரிமைக்கு அச்சுறுத்தல் இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

முகப்புத்தக செயலியில் உள்ள முக அங்கீகார வசதி மூலம் புகைப்படங்கள், காணொளிகள் என்பவற்றில் உள்ள பயனர்களின் முக அடையாளம் தானாக அங்கீகரிக்கப்படும்.

குறித்த வசதியை பயன்படுத்தும் பயனரொருவரின் முக ரேகை கொண்ட புகைப்படங்கள், காணொளிகள் முகப்புத்தக செயலியில் பதிவேற்றப்பட்டால் அது தொடர்பிலும் உடன் தகவல் கிடைத்து விடும்.

இந்த நிலையிலேயே குறித்த வசதியால் தனியுரிமை பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்ததனையடுத்து மெட்டா நிறுவனம் குறித்த வசதியை நீக்குவதற்கு முடிவு செய்துள்ளது. (4-5)

# சீரற்ற வானிலை காரணமாக 11 மாவட்டங்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக இதுவரையில், நால்வர் உயிரிழந்ததுடன், 2 பேர் காயமடைந்தனர்.

இலங்கைக்கு அண்மையாகக் காணப்பட்ட தாழமுக்கம் காரணமாக நாட்டில் கடந்த சில நாட்களாக கடும் மழையுடனான காலநிலை நிலவியது.

இந்த நிலையில், சீரற்ற வானிலையால் 11 மாவட்டங்களில் 1451 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 821 பேர் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

அத்துடன், இந்த அனர்த்தத்தினால் 4 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ள நிலையில் 3 வீடுகள் முழுமையாகவும், 410 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ரி-5)

# சீமெந்து தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு

(கொழும்பு)

எதிர்வரும் 3 வாரங்களுக்குள் அல்லது ஒரு மாதத்துக்குள் சீமெந்து தட்டுப்பாடு முடிவுக்குக் கொண்டு வரப்படும் என சீமெந்து இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

சீமெந்து இறக்குமதியாளர்களுக்கும் நீதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இறக்குமதிக்கான முன் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் நிறுவனத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ரி-5)

## இன்று ஒரு தகவல்

# மனைவியை மயக்க...

மனைவி என்பவள் தனக்குப் பணிவிடை செய்வதற்காக நிரந்தரக் குத்தகையின் அடிப்படையில் வந்து சேர்ந்த வேலைக்காரி என்று சில கணவன்மார்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

தான் வேலைக்காரி போல் நடத்தப்படுகிறேன்; இவருக்கு வாழ்க்கைப்பட்டு என்ன சுகத்தைக் கண்டேன் என்பன போன்ற எண்ணங்கள் மனைவிக்குத் தோன்றாமலிக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது கணவனின் முதற் கடமை.

மனைவியின் ஒவ்வொரு துல்லியமான உணர்வையும் புரிந்து கொள்ளக் கணவன் முன்வர வேண்டும்.

தான்தோன்றித்தனமாகச் செய்வதை உரிமை என்றும் விட்டுக் கொடுப்பதை அடிமைத்தனம் என்றும் எண்ணும் கணவன் வாழ்க்கையில் நிம்மதி காண இயலாது.

கணவனும் மனைவியும் முற்றிலும் மாறுபட்ட குணங்களை உடையவர்களாக இருந்தாலும் திருமணத்திற்குப் பிறகு அனுசரித்துப் போகத்தான் வேண்டும். மனைவி தீர்மானமாக இருக்கும் விடயத்தில் கணவன் சற்று விட்டுக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

மேலை நாடுகளில் இல்லாத வொல்லாத காரணங்களைச் சொல்லி விவாகரத்து வாங்கிக்கொண்டு பிரிந்து விடுகிறார்கள். நம்மவர்கள் திருமண உறவு அப்படிப்பட்டதல்ல. அது ஆழமான, இறுக்கமான உறவுப் பிணைப்பு.

கணவன், மனைவிக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளைப் பூதக்கண்ணாடி கொண்டு பார்க்கும் இந்த உலகத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்வது அவசியம்.

மனைவி கணவன் விடயத்தில் அதிகமாக அக்கறை காட்டுவது அவனுடைய ஒழுக்கம் மற்றும் பழக்கவழக்கங்களில் தாம். இவற்றில் கவனம் செலுத்தாதவர்கள் மனைவியை மயக்கும் முயற்சியில் இறங்குவது வீண் வேலை.

கணவன் நேரம் கழித்து வீட்டுக்கு வருவதையோ, நான் சாப்பிட்டு விட்டேன், வயிறு புல், எனக்கு ஒன்றும் வேண்டாம் என்று கூறுவதையோ சற்றேனும் அன்பு உள்ள எந்த மனைவியும் விரும்புவதில்லை.

"நண்பர்கள் எவ்வளவோ சொன்னார்கள். ஆனாலும் நீ காத்துக் கொண்டிருப்பாய் என்பதாலும், எனக்கு உன் சமையலைத் தவிர வெளியில் சாப்பிட்டால் பிடிக்கவில்லை என்பதாலும் சாப்பிடாமல் வந்து விட்டேன்" என்று ஒரே போடா கப் போட வேண்டும். மனைவிக்குத் தலை சில்லிட்டுப் போகும்.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும். எதிர்பாராத சமயங்களில் மனைவிக்குப் பிடித்த பொருளை வாங்கிக்கொடுத்து ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டும்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## புத்திசாலி ஆட்டுக்குட்டி



நமக்குத்தேவை யான உணவுதான் கிடைக்கிறதே. சாப்பிட்டு விட்டு படுத்துக் கொள்வோம்" என்றது தாய் ஆடு. மறுப்பாக தலை அசைத்தது குட்டி ஆடு.

"அம்மா உங்களைப் போல்என்னால்இரு க்க முடியாது. இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும். அப்போது தான் நாம் சுதந்திரமாக நடமாட முடியும்.

நம் எஜமானரும் இப்படி நமக்காக காவல் இருக்காமல் அவரது வேலையைப் பார்க்க முடியும். அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன்" என தனது திட்டத்தைக் கூறியது.

அதைக் கேட்ட மற்ற ஆடுகளுக்கு சந்தோஷம் தாளவில்லை. "டேய் கண்ணா! நீ மட் டும் இதை வெற்றிகரமாக செய்து முடித்து விட்டால் நமக்கெல்லாம் இந்த சிறையிலிருந்து விடுதலை.

நமது இஷ்டத்திற்கு மேய்ந்து விட்டு இரவில் வீடு திரும்பினால் போதும். நீ இதை சரியாகச் செய்து விடுவாயல்லவா" என்றது வயது முதிர்ந்த ஆடு.

தாய் ஆடு பதறியது. "மகனே! வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு. எனக்கு ஒரே மகன் நீ. உன்னை ஒருபோதும் நான் இழக்கமாட் டேன்.

காட்டுக்குள் போய் விட்டு திரும்பியவர் எவருமில்லை நான் உன்னை அனுப்ப மாட்டேன்" என்று கண்ணீர் சிந்தியது.

"அம்மா அழாதே! நான் புத்திசாலி என்று நீதானே அடிக்கடி சொல்வாய். இப்போது நீயே தடை போடலாமா. நம் இனத்தை எப்படி அழித்தன அந்த மிருகங்கள்.

அவற்றை நம்மால் அழிக்க முடியா விட்டாலும் விரட்டியடிக்கலாமே. அம்மா தைரியமாக இரு. நான் வெற்றியோடு திரும்புவேன்.

பாட்டி அம்மாவுக்கு தைரியம் சொல். நான் வெற்றிச் செய்தியோடு வருகிறேன்" என்றவாறு பட்டியின் மீதேறி தாவி வெளியில் குதித்தது உற்சாகமாக துள்ளியவாறு காட்டை நோக்கிச் சென்றது.

காட்டிற்குள் நாலைந்து நரிகள் குறுக்கும் நெடுக்குமாய் பசியோடு உலாவிக் கொண்டிருந்தன. பசி உயிரை எடுக்கிறது. ஒரு ஆடு கூட இரண்டு நாளாக கண்ணில் படவில்லையே. பட்டிக்காரன் உஷாராகி விட்டானா என தங்களுக்குள் புலம்பிக் கொண்டிருந்தன.

அப்போது சற்று கரகரப்பான வித்தியாசமான குரலில் காட்டுக் கொடிகளுக்கிடையே சிக்கித் தவித்துக் கொண்டிருந்த அந்த கொழுத்த ஆட்டுக் குட்டி அதன் கண்ணில் பட்டது.

"ஆஹா! இரண்டு நாளாய் காய்ந்து கிடந்ததற்கு இன்று நல்ல விருந்து வாருங்கள் போகலாம்" என்றவாறு ஆட்டுக்குட்டியை நெருங்கியது.

ஆட்டுக்குட்டி அனைத்தையும் பார்த்துக்கொண்டு ஒற்றைக் கண்ணை மூடிக்கொண்டு ஏதோ தவம் செய்வது போல் நின்று கொண் டிருந்தது. (தொடரும்)

# மகாபாரதம்




நாரதர் மேலும், "உலகத்திற்கு அச்சம் தரும் வாயு பகவான் உனக்கு உறவினன் அல்லது நண்பன் என்னும் காரணத்தால் உன்னை ஒன்றும் செய்யவில்லை.

வாயுவிற்கு நீ எப் போதும் கீழ் படிந்து நடக்கிறாய் என நினைக்கிறேன். அதனால் தான் வாயு உன்னை மட்டும் ஒன்றும் செய்வதில்லை.

ஓ! இலவமரமே, ஏதோ காரணத்தால் வாயு பகவானால் நீ பாதுகாக்கப்படுகிறாய் என்ப தில் ஐயமில்லை. அதனால் தான் தைரியமாக ஓங்கி நிற்கிறாய்" என்றார். அதற்கு இலவ மரம் மறுப்புத் தெரிவித்தது.

நாரதரே! வாயு என் உறவினனுமில்லை. நண்பனும் இல்லை. ஆயின் என் ஆற்றல் கண்டு வாயு அஞ்சுகிறது. எனது பலத்தில் சிறு பகுதிக்குக்கூட வாயுவின் பலம் ஈடாகாது.

சிறியதும், பெரியதுமான மரங்களை எல்லாம் கொடூரமாக வீழ்த்திக் கொண்டு வரும் வாயுவை நான் என் பலத்தால் அடக்கி விடுகிறேன். மாமுனிவரே. மிகவும் சினம் கொண்டால் கூட வாயுவினால் என்னை ஒன்றும் செய்ய முடியாது என ஆத்திரத்துடன் கூறியது.

உடனே நாரதர் இலவ மரத்தை நோக்கி "உனது கருத்துச் சரியன்று. பயங்கரமானது. வாயுவின் பலத்துக்கு இணையாக யாருடைய பலமுமில்லை. எமனும் இந்திரனும்கூட ஆற்றலில் வாயுவுக்கு இணையாகார்.

உலகில் உள்ள எல்லாப் பொருட்களுக்கும் அசைவையும், உயிரையும் கொடுக்கும் மகாப் பிரபு ஆகிறான் வாயு. வாயு எங்கும் சஞ்சரித்தால்தான் உயிரினங்கள் எங்கும் உலவ முடியும். அதனால் வணங்கத் தக்க தெய்வம் வாயு.

பணிந்து வணங்குவதற்கு மாறாக இழிவாக அல்லவா பேசுகிறாய். நீ வலிமைஅற்றவன் பொறாமையுடையவன். உனது பேச்சு எனக்கே சினத்தை உண்டாக்குகிறது.

மிகச் சிறந்த மரங்களான சந்தனம், தேக்கு, தேவதாரு போன்ற மரங்கள்கூட இப்படி வாயுவை பழித்ததில்லை. இப்போதே சென்று வாயுவிடம் உன்னைப் பற்றிக் கூறுகிறேன்" என்றார்.

சொன்னபடியே வாயு பகவானிடம் "இமய மலையில் மிகப் பிரம்மாண் டமான இலவ மரம் இருக்கிறது. அது தங்களைக் கேவலமாகப் பேசுகிறது. அது சொன்னதைச் சொல்லக்கூட நா கூசுகிறது.

தங்களை விட சிறந்தவர் யாருமில்லை. நீர் சினத்தில் யமனுக்கு இணையாவர். இதனை நான் அறிந்துள்ளேன். ஆயினும் இலவ மரம் தங்களை இழிவாகப் பேசுவதை நினைக்கும் போதுதான் வருத்தமாக இருக்கிறது" என்று கூறினார். (தொடரும்)

ஒரு மலரைப்போல இருங்கள். ஒருவர் ஒரு மலரைப் போல மாற முயற்சிசெய்ய வேண்டும். ஒளிவுமறைவின்றி உண்மையாக சமநிலைகொண்டு தாராளமனதுடன் அன்புடன் இருக்க முயலவேண்டும். - ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தர்மமான வாழ்வை அமைத்துக் கொள்வோம்!

இன்று தீபாவளித் திருநாள். நரகாசுரன் எனும் அசுரனை காத்தற் கடவுளாகிய கிருஷ்ண பரமாத்மா அழித்த நாள்.

இங்கு நரகாசுரனை கிருஷ்ண பரமாத்மா அழித்ததன் காரணமாக தீபங்கள் ஏற்றப் படுவதாக யாரும் கருதிவிடக்சுவடாது.

மாறாக, நரகாசுரன் என்பானை அதர்ம மாகக் கொண்டு அந்த அதர்மத்தை இறை பரம்பொருள் அழித்து, தர்மத்தை நிலை நாட்டினார் என்றும் தர்மம் நிலைநாட்டப்பட்டதன் காரணமாக எங்கும் அருட்பெரும் ஜோதியாக தீபங்கள் ஒளிர்வதுபோல மனிதவாழ்வு மிகப் பிரகாசமாக அமையும் என்பதை உணர்த்துவதே தீபாவளிப் பண்டிகையாகும்.

ஆக, அதர்மம் தலைவிரித்தாடும்போது இருள் சூழ்ந்துகொள்ளும்.

எனவே, அதர்மத்தினூடு சூழ்ந்துகொண்ட இருளை அகற்றி ஒளி ஏற்றவேண்டுமாயின் இறைவன் துணையும் அவன்மீது நம்பிக்கையும் கொண்டு தர்மகாரியங்களை செய்யும் போது; அதர்மத்தினின்றும் எழுந்த இருள் அகன்று, பிரகாசமான ஒளி தோன்றும் என்பது தீபாவளித் திருநாள் நமக்கு உண்ர்த்துகின்ற தத்துவமாகும்.

இங்கு அதர்மம் என்பது நம் ஒவ்வொருவரிலும் இருப்பதனால் எங்கள் உள்ளம் இருள் சூழ்ந்து கிடக்கின்றது.

அகம் இருள் சூழ்ந்தால், இல்லகத்தில் ஒளி ஏது?

ஆம், இந்த உண்மையை உலகம் இன்று நிதர்சனமாக அனுபவிக்கின்றது. கொரோனா எனும் பெருந்தொற்று உலகெங்கும் வாழும் மனித சமூகத்தை வாட்டி வதைக்கிறது.

அந்தோ!, விஞ்ஞானத்தின் உயரிய வளர்ச்சி, தொழில்நுட்பத்தின் வானுயர்ந்த உயர்ச்சி, மருத்துவத்தின் மகத்தான சாதனை என உலகம் எங்கோ சென்றுகொண்டிருக்கையில் கொரோனாப் பெருந்தொற்று ஒரு கணப்பொழுதில் இலட்சக்கணக்கான மனித உயிர்களைச் சங்காரம் செய்ததெனில், அதன் பொருள்பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

இந்தச் சிந்தனையின் தெளிவில் தர்மம் தழைக்கவேண்டும். அறம் ஓங்கவேண்டும். மேன்மைகொள் நீதி உலகமெலாம் விளங்க வேண்டும். அப்போதுதான் எங்கும் ஒளிப் பிரகாசமாய் மனித வாழ்வு சிறக்கும்.

ஆகையால் அன்புக்குரியவர்களே! இன்றைய தீபாவளித் திருநாளில்; இல்லாதவர்களுக்கு உதவிசெய்து, ஏழை மக்களுக்கு உண்டி கொடுத்து, வறியவர்களுக்கு புத்தாடையைப் பரிசளித்து எம்மிடமிருப்பதில் மற்றவர்களுக்கும் கொடுத்து நாமும் வாழ்ந்து அவர்களையும் வாழவைப்போம்.

இதுவே இறைவனுக்கு உகந்தது என்று உணர்வோம். என்றும் அறம் செய்து அகத்தை இறைவன் குடியிருக்கும் கோவிலாக ஆக்குவோம்.

# பொருளாதார தோல்வியிலுள்ள அரசாங்கம் தன்னை இயங்கு நிலையில் காட்ட முனைகிறது

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பொருளாதாரத் தோல்வியின் விளிம்பில் உள்ள இந்த அரசாங்கம் தன்னை இயங்கும் நிலையில் உள்ளது போன்று காட்ட முனைகிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறைகளைக் கொண்ட முன்பள்ளியினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலே முன்பள்ளிகளுக்கு என்று ஒரு திடமான கொள்கை இல்லை. முன்பள்ளிகளுக்கு மட்டுமல்ல கல்வியில் கூட கௌரவமான, உறுதியான, நீடித்து நிலைத்திருக்கக் கூடிய கல்விக் கொள்கை இல்லாததால்தான் இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளதோடு குடும்ப அரசியல் மயப்படுத்தப்பட்ட சூழலுக்குள்ளும் தள்ளப்பட்டு இலங்கையின் பொருளாதாரம் இன்று நாணயத்தாள்களை அச்சிடுகின்ற பொருளாதாரமாக மாறியிருக்கிறது. நாளாந்தம் நாணயத்தாள்களை அச்சிடுவதும் நாளுக்கு நாள் விலைவாசிகளை அதிகரிப்பதுமாகத்தான் இந்த அரசாங்கத்தின் செயற்பாடு மாறியிருக்கிறது. இது ஒரு நாட்டுக்கு ஆரோக்கியமானது இல்லை.

ஒரு நாட்டினுடைய வரவு - செலவுத் திட்டம் குறையில் இருப்பதும் அரசாங்கத்திடம் இருக்க வேண்டிய வெளிநாட்டு இருப்புக்கள் இல்லாது இருப்பதும் இந்த நாடு பட்டினியை நோக்கி வறுமையை நோக்கி நகர்ந்து செல்வதையே வழிகாட்டி நிற்கின்றது.

அதேபோல் இன்று இலங்கையில் 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் அதிகமான பட்டினியை நோக்கி இந்த நாடு நகரப் போகிறது என்பதனை இந்த நாட்டினுடைய குடும்ப அரசியலில் அங்கத்தவராக இருக்கின்ற சமல் ராஜபக்ஷ கூறியிருக்கிறார். நீங்கள் சோறு இல்லை என்றால் மரவள்ளிக்கிழங்கை சாப்பிடுங்கள் என்று அறுபதாம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வார்த்தைகளை 70 ஆண்டு காலப்பகுதியில் நடந்த சம்பவங்களை மீண்டும் அவர் நினைவூட்டி இருக்கிறார் என்றார். (ம)

## திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம்

# பொதுச் சந்தைகளின் நிலைவரம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் நேரில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 3 பொதுச் சந்தைகளின் நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் வியாபாரிகள், பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேரில் ஆராய்ந்தார்.

மருதனார்மடம், சுன்னாகம் மற்றும் திருநெல்வேலி பொதுச் சந்தைகளுக்கு நேற்றுக் காலை சென்று ஆளுநர் இந்த அவதானிப்புகளை முன்னெடுத்தார்.

பொதுச்சந்தைகளில் வியாபாரிகள், பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்த மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரிகளுக்கு தனது அறிவுறுத்தலை எதிர்வரும் நாட்களில் வழங்கவுள்ளார் என அறிய முடிகிறது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர மத்திய பேருந்து நிலையம் வெளிமாவட்டங்களுக்கான பேருந்து நிலையம் என்பவற்றையும் மாகாண ஆளுநர் நேற்று முன்தினம் நேரில் சென்று ஆராய்ந்தார். (ம)

# வாடகை வீட்டில் இருப்பவர்களும் வாக்காளர்களாக பதிவு செய்யலாம்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாடகை வீடுகள், குத்தகைக் கட்டடங்களில் வசிப்பவர்கள் அல்லது அங்கீகரிக்கப்படாத குடியிருப்பில் வசிப்பவர்கள் வேறு நிபந்தனைகளை நிறைவு செய்தால், வாக்காளர்களாகப் பதிவு செய்யலாம் என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் பதிவேட்டில் பெயர்களை சேர்க்கும் போது கட்ட உரிமையை தேவையாகக் கருதுவதில்லை என்று ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

சொத்தின் உரிமையாளரின் ஒப்புதலும் தேவையில்லை என்று தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தனிநபரை வாக்காளர்களாகப் பதிவு செய்வதைத் தடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். நீதிமன்றங்கள் அத்தகைய நபர்களுக்கு சிறைத்தண்டனை மற்றும் தண்டம் விதிக்கலாம் என்றும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ம)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பாரியளவில் வளர்ச்சியடையும்."**

-கிரேக்கப் பழமொழி

# சத்திய தரிசனம்

## பிரமாண்ட லிங்கம்



- இது பிரமாண்ட லிங்கம். பிரபஞ்சத்தின் குறியீடு. இதனுள்ளே நவக்கிரகங்களும் சுழல்கின்றன. எல்லாக் கோள்கள், அவற்றின் துணைக்கோள்கள், ஆதி அக்னி, ஆதிப்புழுதியிலான மேகங்கள், அண்டத்தின் மேலே 'ஜகதேக சக்ஷு' (ஜகத்தின் ஒரே விழி) பதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரபஞ்சம் முழுவதையும் இது குறிக்கிறது. நீங்கள். ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்.
- பல ஜன்மங்களில் செய்த புண்ணியம் உங்களை இந்த ஆச்சரியத்தை, அரிய சிருஷ்டியைப் பார்க்க இங்கே வருவித்திருக்கிறது. ஆண்டுக்கணக்கான பூஜை, ஜபங்கள், விரதங்கள்,கூட இந்த அரிய வாய்ப்பை உங்களுக்குத் தராது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்தத் தெய்வீக உபதேசத்தைக் கேட்கக் கிடைத்த நல்லதிர்ஷ்டத்தைப் பயன்படுத்தி சத்சங்கத்தில் சேர்ந்து இலட்சியத்தை அடைய முயலுங்கள்.

(முற்றும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

08

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அதற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் விடயங்கள் எப்போதுமே ஒருவித ஆச்சரியத்தையே கொடுக்கும். உதாரணமாக மாட்டை விலை பேசும் போது, வியாபாரிகள் இரண்டு பேர் கைகளில் துண்டைப் போட்டு விலை பேசுவது வழக்கம். அதற்குப் பின்னால் இருக்கும் விடயங்கள் பெரும்பாலானோருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இது போல சந்தைகளில் மாடுகளை வாங்கும் போது பல விடயங்களை சுட்டிக்காட்டி விலை பேசப்படும்.

ஒருவர் விற்பனை செய்ய சந்தைக்கு மாடுகளைக் கொண்டு செல்வார். அங்குள்ள தரகர்கள் வியாபாரிகளை அழைத்து வந்து அந்த மாடுகளைக் காண்பிப்பார். மாடுகள் பிடித்துப் போனால், தோளில் இருக்கும் துண்டு கைக்கு வந்து விடும். தரகரும் வியாபாரியும் துண்டைப் போட்டுக் கொண்டு பேரத்தைத் தொடங்குவர். வியாபாரி 5 விரல்களைக் கூட்டிப்பிடித்தால் ஒரு குறிப்பிட்ட விலை.

மோதிர விரலையும் சுண்டு விரலையும் பிடித்தால் இன்னொரு விலை எனவும், சில்லறையைக் குறிக்க விரல்களில் உள்ள ஒவ்வொரு ரேகையையும் (மூட்டுக்களையும்) பிடித்து விலையை நிர்ணயம் செய்வது உண்டு. விலை பேசும் போது விலையை உடைத்துப் பேச பாதி விரலை பிடித்துக் கொள்வர்.

சில சந்தர்ப்பங்களில் சில சொற்களையும் பேசி மாட்டின் விலை நிர்ணயிக்கப்படும். இது போக அப்போது பரிமாறப்படும் சொற்களும் புரியாததாகவே இருக்கும். "இத்தனை விரலுக்குவராது", "அதெல்லாம் வரும்", "இன்னும் கொஞ்சம் சேர்த்து முடிங்க" இப்படித்தான் விலை பேசப்படுமே தவிர, விலையைப் பற்றி வெளியே தெரியாது.

**மாடுகள் வாங்கும் போது மாடுகள் பிடித்துப்போனால், தோளில் இருக்கும் துண்டு கைக்கு வந்து விடும். தரகரும் வியாபாரியும் துண்டைப் போட்டுக் கொண்டு பேரத்தைத் தொடங்குவர். இவ் வகையான விரலில் விலை பேசும் வழக்கம் தமிழரிடம் இருந்துள்ளது.**

தமிழ்நாட்டில் விலைபேசலில் ஒரு கையை மொத்தமாகப் பிடித்தால் 'வாட்சி' என்று பெயர். இந்தப் பிடி பத்து ரூபாயிலிருந்து பத்தாயிரம் வரை போகும். இரண்டு விரலைப் பிடித்தால் இருநூறிலிருந்து இரண்டாயிரம் வரை போகும். இதற்கு 'சௌடு' என்று பெயர். இப்படியே 'தட்டை', 'பனியன், பொருத்து, பிச்சி, வலுவு, தாயம் என்று ஒவ்வொரு விரலுக்கும் மூன்று, நான்கு என்று விலை கூடிக் கொண்டே போகும். அந்தக் காலத்தில் பொருளாதார வலுவும் அதிகமாக இல்லாததால் பத்தாயிரம், இலட்சம் என்று யாரும் விலை பேசுவதில்லை.

இத்தனை மறைமுகமாகப் பேசும் காரணமும் உண்டு. வெளிப்படையாகக் குறைகளைச் சொல்லி விலை பேசிவிட்டால், அடுத்து விலை கேட்பவர் குறைத்துக் கேட்பார் என்பதற்காகத்தான் இந்த வழிமுறை. அதற்காகத்தான் இந்தத் துண்டு பேரம். அதாவது அந்தக் காலத்திலேயே தமிழர்கள் கைவிரலில் எண்ணப் பழகியிருந்தார்கள்.

8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தின் வடக்கில் வசித்த வெனர பிள்பேட் என்பவர் ஒரு ரோமானிய முறையான விரல் எண்ணும் முறையை விபரித்திருந்தார். அதன்படி, இலக்கத்தை எண்ணுவதற்கு, படத்தில் காட்டியபடி, கை விரல்களில் செய்தல் வேண்டும். 1 தொடக்கம் 99 வரையான இலக்கங்களை எண்ணுவதற்கு இடதுகை விரல்களிலும் 100 தொடக்கம் 9000 வரையான இலக்கங்களை எண்ணுவதற்கு வலதுகை விரல்களிலும் படத்தில் காட்டியபடி சைகை பண்ண வேண்டும். 100க்கும் 9999க்கும் இடைப்பட்ட எண்ணை எண்ணுவதற்கு இரண்டு கைகளின் விரல்களும் பயன்படுத்தப்படும்.

1 தொடக்கம் 19 வரையான இலக்கங்களை எண்ணுதல்

1 = சின்ன விரலை அதன் நடு மூட்டில் வளைத்தல்.

2 = மோதிர விரல், சின்ன விரல் ஆகியவற்றை அவற்றின் நடு மூட்டில் வளைத்தல்.

3 = நடுவிரல், மோதிர விரல், சின்ன விரல் ஆகியவற்றை அவற்றின் நடு மூட்டில் வளைத்தல்.

4 = நடுவிரல் மற்றும் மோதிர விரல் ஆகியவற்றை அவற்றின் நடு மூட்டில் வளைத்தல்.

5 = நடுவிரலை மட்டும் அதன் நடு மூட்டில் வளைத்தல்.

6 = மோதிர விரலை அதன் நடு மூட்டில் வளைத்தல்.

7 = சிறிய விரலால் உள்ளங் கையை மூடுதல்.

8 = மோதிர விரல், சின்ன விரல் ஆகியவற்றால் உள்ளங்கையை மூடுதல்.

9 = நடுவிரல், மோதிர விரல், சின்ன விரல் ஆகியவற்றால் உள்ளங்கையை மூடுதல்.

10 = ஆள் காட்டி விரலின் நுனியால் கட்டை (பெரு) விரலின் நடு மூட்டைத் தொடுதல்.

11 தொடக்கம் 19 வரை எண்ணுவதற்கு 10க்கான செய்கையுடன் 1 தொடக்கம் 9 வரையான செய்கையைச் செய்தல் வேண்டும்.

20 தொடக்கம் 29 வரை எண்ணுதல்.

20 = ஆள் காட்டி மற்றும் நடு விரல்களுக்கு இடையில் கட்டை விரலை செருகுதல். இதனால் கட்டை விரலின் நகம் ஆள் காட்டி விரலின் நடு மூட்டைத் தொடும்.

21 தொடக்கம் 29 வரை எண்ணுவதற்கு 20க்கான செய்கையுடன் 1 தொடக்கம் 9 வரையான செய்கையைச் செய்தல் வேண்டும்.

30 தொடக்கம் 39 வரை எண்ணுதல்.

30 = கட்டை விரலின் நுனியால் ஆள் காட்டி விரலின் நுனியைத் தொட்டு வட்டம் அல்லது மோதிரத்தை உருவாக்குதல்.

31 தொடக்கம் 39 வரை எண்ணுவதற்கு 30க்கான செய்கையுடன் 1 தொடக்கம் 9 வரையான செய்கையைச் செய்தல் வேண்டும்.

40 தொடக்கம் 49 வரை எண்ணுதல்.

40 = கட்டை விரல் மற்றும் ஆள்காட்டி விரல்களை ஒன்றாக நிமிர்த்தி படத்தில் காட்டியவாறு வைத்திருத்தல்.

41 தொடக்கம் 49 வரை எண்ணுவதற்கு 40க்கான செய்கையுடன் 1 தொடக்கம் 9 வரையான செய்கையைச் செய்தல் வேண்டும்.

50 = கட்டை விரலின் இரு மூட்டுகளையும் வளைத்து உள்ளங்கைக்கு எதிராகப் (படத்தில் காட்டியவாறு) பிடித்தல்.

60 = கட்டை விரலின் நகத்தின் மேல் ஆள்காட்டி விரலை வைத்து நகத்தை மூடுதல்.

70 = ஆள்காட்டி விரலின் நுனி கட்டை விரலின் முதல் மூட்டில் பொறுத்திருத்தல் (resting over). படத்தைப் பார்க்கவும்.

80 = ஆள்காட்டி விரலின் முதல் மூட்டு கட்டை விரலின் முதல் மூட்டில் பொறுத்திருத்தல் (resting over). படத்தைப் பார்க்கவும்.

90 = கட்டை விரலின் முதல் மூட்டுக்கு மேல் ஆள்காட்டி விரல் வளைந்திருத்தல்.

100, 200, 300 மற்றும் பலவற்றிற்கான குறிகள் (சைகைகள்) 10, 20, 30 போன்றவை, ஆனால் வலது கையால் செய்யப்படும்.1,000, 2,000, 3,000 மற்றும் பலவற்றிற்கான குறிகள் (சைகைகள்) 1, 2, 3 க்கு சமமானவை, ஆன்ால் வலது கையால் செய்யப்படும். மேலும் இம் முறைமை தற்போதும் மத்திய கிழக்கு நாட்டின் சில பிரதேசங்களில் பாவனையில் உள்ளது.

**இடது கையில் கட்டை விரலின் நுனியால் ஆள்காட்டி விரலின் நுனியைத் தொட்டு வட்டம் போட்டால் அதன் பெறுமானம் 30. அதனை வலது கையில் செய்தால் அதன் பெறுமானம் 300 ஆகும்.**

இடது கையால் செய்யும் சைகையை வலது கையால் செய்தால் பெறுமானம் பல மடங்கு அதிகரித்துவிடும். படத்தைப் பார்க்கவும்.

**விரல் என் முறைமை - Finger Numerals**




(தொடரும்...)

## கண்ணகை ...

சேதம் அடைந்தன.

நேற்று மதிய வேளை திடீரென வீசிய சூறாவளியால் கடலோரத்தில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் ஆலயக்கூரைகள் தூக்கி வீசப்பட்ட நிலையில் மண்டபங்கள் பலத்த சேதம் அடைந்தன. (ம)

## 17 வயது மாண...

பொதிகளை தன்வசம் வைத்திருந்த 17 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மூர் வீதியைச் சேர்ந்த குறித்த 17 வயதுடைய பாடசாலை மாணவனிடம் இருந்து 4 கிலோ 700 கிராம் கேரள கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் சந்தேக நபர் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளனர். (ம-285)

## வடக்கு பாடசா...

தீபாவளி பண்டிகை இடம்பெறுவதால் பொது விடுமுறை நாளாகும். அதனால் நாளை வெள்ளிக்கிழமையும் பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு விடுமுறை வழங்கப்படுவதனால் அதற்கு பதில் நாளாக வரும் நவம்பர் 13ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலைகள் இடம்பெறும் என்று மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார். (ம-18,33)
















## 316 ஏக்கர் ...

ப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முகமாலை கிராம சேவகர் பிரிவில் இது வரை 2,186 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 197 பேருக்கு அரசாங்கத்தினால் வீட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. (ம)

## யாழ்.-கொழும்பு ...

அதிபர் ரி.பிரதீபன் அறிவித்துள்ளார்.

காங்கேசன்துறையிலிருந்து அதிகாலை 5.30 மணிக்கும் யாழ்ப்பாணம் முதன்மை ரயில் நிலையத்திலிருந்து 6.10 மணிக்கும் சேவையை ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட தொடருந்து சேவை இன்று முதல் சேவையை மீள ஆரம்பிக்கவுள்ளது.

கொழும்பு - யாழ்ப்பாணம் இடையே குளிரூட்டப்பட்ட முதலாம் வகுப்பு ஆசனப் பதிவுக் கட்டணமாக ஆயிரத்து 400 ரூபாயும் இரண்டாம் வகுப்புக் கட்டணமாக 800 ரூபாயும் அறவிடப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

முற்பதிவு இன்றி சாதாரண வகுப்பில் பயணம் செய்பவர்களுக்கு 350 ரூபாய்யும் கட்டணமாக அறிவிக்கப்படும். (ம)

## யாழில் சேதன ...

ட்ட விவசாயிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு பலாலியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாதுகாப்பு படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவினால் சேதன பசளை உற்பத்திகள், கூட்டெருக்கள், இலைக்கரைசல்கள் என்பன சம்பிரதாயபூர்வமாக விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கையின் விவசாயத்திலே முழுமையாக சேதனப் பசளையினை உபயோகப்படுத்த வேண்டுமென்ற ஜனாதிபதியின் நோக்கத்திற்கமைவாக இராணுவத்தினரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளே நேற்று அறிமுகம் செய்யப்பட்டது

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி ஜகத் கொடித்துவக்கு, யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள் உட்பட பல உயர் இராணுவ அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர். (ம-33)

## இனங்களுக் ...

களுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்காத அரசாங்கம், அருட்தந்தை சிறில் காமினியை குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைத்துள்ளது.

தன்னை கைது செய்யாமலிருப்பதற்கு அருட்தந்தை சிறில் காமினி அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்துள்ளார். அவர் கைது செய்யப்படுவாராயின் கத்தோலிக்க மக்கள் நிச்சயம் வீதிக்கு இறங்கி கடும் எதிர்ப்பை வெளியிடுவர்.

இதன்மூலம் பௌத்த மக்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கும், வேறு வழிகளில் முஸ்லிம் மக்களுக்கும் பௌத்த மக்களுக்கும் முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் முயற்சிக்கிறது என்றார். (ம)

## நாட்டில் பல் ...

இதற்கு துறைமுக தொழிற்சங்கங்களும் தமது ஆதரவை வெளிப்படுத்தின. தொடருந்து திணைக்கள தொழிற்சங்கத்தினர் வேதன உயர்வைக்கோரி, மருதானை தொழில்நுட்ப சந்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

வேதன உயர்வைக்கோரி தேசிய சேமிப்பு வங்கியின் பணியாளர்கள், கொள்ளுப்பிட்டி தலைமையகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினர்

தமது வேதன உயர்வைக் கோரி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் ஆமர் வீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். (ம)

## விலை அதிகரிப் ...

வர்த்தகத்துறை அமைச்சில் புதன் கிழமை நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய உற்பத்திகளை வலுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் பல திட்டங்களை வகுத்துள்ளது. இதன் காரணமாக பல சவால்கள் ஏற்பட்டுள்ளன. அரிசி உற்பத்தியில் தன்னிறைவடைய வேண்டும் என்பதற்காக அரிசி இறக்குமதி செய்யப்படுவது ஆரம்பத்தில் இடைநிறுத்தப்பட்டது.

தேசிய மட்டத்தில் அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்காக செயற்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்காத காரணத்தினால் மீண்டும் அரிசி இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பதில் டொலர் பிரச்சினை காணப்படுகிறது. நாட்டுக்குள் டொலர் உள்வரும் பிரதான துறையான சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆகவே இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் டொலர் தேசிய மட்டத்தில் அச்சிடப்படவில்லை என்றார். (ம)

## 21 பேர்..

கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 13,791 ஆக உயர்வடைந்துள்ளது.

உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 06 ஆண்களும் 15 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதில் 30 முதல் 59 வயதிற்கிடைப்பட்டவர்களில் 5 பெண்கள் உள்ளடங்குகின்றனர். (ம)

## தீபா ...

சென்றவர்கள் மீண்டும் தமது வீடுகளை நோக்கி திரும்பியுள்ளனர்.

இதனால் போக்குவரத்து சேவையும் அதிகரிக்கப்பட்டிருந்ததோடு சமூக இடைவெளி பேணாமல் பலர் பிரயாணம் செய்திருந்தனர். இதனால் கொரோனாக் கொத்தணி ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும் வர்த்தக நிலையங்களில் அதிகளவான மக்கள் ஒன்று கூடியதால் வைரஸ் தொற்று ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வவுனியாவில் 16 பேருக்கு தொற்று

(வவுனியா)

வவுனியாவில் 4 சிறுவர்கள் உட்பட 16 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதில், நெடுங்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 வயதுடைய இரு சிறுவர்களுக்கும், பரசங்குளம் பகுதியைச் சேர்ந்த 3 வயது சிறுமி ஒருவருக்கும், கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரு வயது சிறுவன் ஒருவருக்கும் என 4 சிறுவர்கள் உட்பட 16 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-250)


















## வீடு வாடகைக்கு தேவை

மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு கந்தர்மடம், நல்லூர், திருநெல்வேலி, ஆனைப்பந்தி ஆகிய இடங்களில் அமைந்த வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

(C-2945)

**076 948 1476**

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

CB HONDA HORNET (160CC) இல. BEF, HONDA DIO இல. BFG விற்பனைக்கு உண்டு.

(8491)

**076 806 3757**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோயிலின் வடக்கு பிரதான வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். (பலாலி வீதியிலிருந்து 600 மீற்றர் தூரமாகும்.)

தொடர்பு

(8492)

**077 623 4204**
**077 288 0152**

## Skyline இன் தீபாவளி நல்வாழ்த்துக்கள் !



### நீர்க்கசிவை நிறுத்துவதற்கு Water Proofing



மழைகாலத்தில் மிகமிக முக்கியமாக உங்கள் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவு பிரச்சினைகளை நீக்கி மழைகாலத்தில் கூடுதல் மகிழ்ச்சியிலிக்கவும் கவலையைக் குறைக்கவும் நாங்கள் வந்துள்ளோம். மிகச் சிறந்த Water Proofing வேலைகளை (சிறந்த இரசாயனங்கள்) செய்து தருகிறோம்.

சிமெந்தினால் கட்டப்பட்ட கடைகள், வீடுகள் போன்றவற்றில் உள்ள வெளிப்புறச் சுவர்கள், மொட்டைமாடிகள், தண்ணீர்த் தொட்டிகள், மேல்மாடி குளியல் அறைகள், கோவில்கள், தேவாலயங்கள், மண்டபங்கள், நீச்சல் தடாகங்கள், முகட்டுக்கூரைகள், பல்கனி போன்றவற்றில் நீர்க்கசிவு இரசாயனங்களை உபயோகித்து 10வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகிறோம்.

**Skyline Holders (Pvt) Ltd, Jaffna**
077 722 0095 / 021 225 2999
(யாழ்ப்பாணம் / கிளிநொச்சி)
ஜெகன் 077 741 4960 (முல்லைத்தீவு)
விமலநாதன் 077 279 0743 (மன்னார் / வவுனியா)

(8470)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-2918)

**0768226240** DHL

## மணமகள் தேவை

13.08.1979 இல் பிறந்த B.Sc (jaffna), M.Sc (London) படிப்பு முடித்த அச்சுவினி நட்சத்திரம் London இல் சொந்தத் தொழில் புரியும் (PR இல்லை) மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகள் Student Visa வில் செல்ல ஆர்வமுள்ளவராயின் தொடர்புகொள்ளவும். (ஒழுங்கு செய்து தரப்படும்.)

(8483)

**077 110 7624**
**077 880 0353**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 14 அடி பாதையுடன், மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம்

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(8489)

**077 814 7389**
**077 614 7333**

## சட்டமா அதிபரின் அனுமதியுடன் யுகதனவி ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

யுகதனவி ஒப்பந்தத்தின் அடிப்படை சரத்துக்கள் தொடர்பில் சட்டமா அதிபரின் அனுமதி பெறப்பட்டதன் பின்னர் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பெர்டினாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பான ஒப்பந்தம் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம)

## காணி குத்தகைக்கு வழங்கல்

செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு தர்மநன்கொடையாக வழங்கப்பட்ட ஆலயக்காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு 24.10.2021 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதினால் அக்காணியினை குத்தகைக்கு பெற விரும்புபவர்கள் 25.11.2021 ஆம் திகதிக்கு முன் கோரிக்கைக் கடிதத்தினை ஆலய திருப்பணிக் காரியாலயத்தில் ஒப்படைத்துக் கொள்ளவும்.

குத்தகைக் காலம் 5 வருடங்கள்.
வருடாந்த குத்தகை 10,000/= ரூபாவிற்கு மேல்.
குத்தகை ஒப்பந்தச் செலவுகள் குத்தகை பெறுபவரால் செலுத்தப்பட வேண்டும்.
குத்தகை ஒப்பந்தம் எழுதும் சட்டத்தரணி ஆலய நிர்வாகத்தினரால் தெரிவு செய்யப்படுவார்.

**காணி அமைவிடம்**

தொண்டைமானாறு சந்தியிலிருந்து வல்லை நாற்சந்திக்கு செல்லும் பிரதான வீதியில் தனு வெளியீட்டகத்திற்கு அருகில் உள்ள பயறியோடை 4 நிலப்பரப்பும் 14 குளியும் உடைய ஸ்ரீமான் ஆறுமுகம் சிவசம்புவின் ஞாபகார்த்தமாக சிவசம்பு நடேசன் அவர்களினால் வழங்கப்பட்ட காணியாகும்.

ஆலய நிர்வாகம்
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

(8481)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# மரண அறிவித்தல்



தோற்றம் 1939 – 08 – 31

மறைவு 2021 – 11 – 03

## லீலாவதி துரைராசா

புதுவளவு, நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி லீலாவதி துரைராசா நேற்று (03.11.2021) புதன்கிழமை இறைவன் திருப்பாதங்களை சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற பொன்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் துரைராசாவின் அன்பு மனைவியும் செல்வச்சோதி பாலசிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர்), உருத்திராவதி சிவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வாசுதேவன் (லண்டன்), வாசுகி (ஆசிரியை - யா/கரவெட்டி விக்கினேவரா ஆரம்பப் பாடசாலை), காலஞ்சென்ற ரோகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் வா.தயாநிதி (லண்டன்), க. நித்தியானந்தன் (அதிபர் - யா/ புலோலி கிழக்கு அ. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஐங்கரன் (பொறியியலாளர் - லண்டன்), விதுசன் (மருத்துவபீட மாணவன் - லண்டன்), நிகிதன் (மாணவன் - லண்டன்), சாமந்தி (4ஆம் வருட மாணவி, சித்த மருத்துவபீடம், திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2021) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-2950)

க. நித்தியானந்தன்(மருமகன்) 077 899 7948

தகவல் :- குடும்பத்தினர்

## நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 02 நாட்களே

### அமெரிக்க அதிஸ்ட விசா



ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

55000 இலவச விசாக்கள்

**0768226244**

வெளிநாடு செல்வது எனது இலட்சியம் எனது குடும்ப பொருளாதார வசதியை பொருத்தளவில் அது கனவு. எனது இலட்சியத்தினையும் கனவினையும் ஒரு கணத்தில் நிறைவேற்றிய V2 Travels க்கு எனது இதயபூர்வமான நன்றிகள்.

(C-2919)



குகப்பிரியா
அமெரிக்கா விசா வெற்றியாளர்

**V2 Travels**

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.